பதிவு எண் M. 4900 16 பக்கங்கள்.

குடிஅரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 23-4-1949 சனிக்கிழமை } மலர் 33.

20 ஆண்டுகளுக்குமுன் பெரியார்.

மெட்டிரியலிஸம்.

★

கடவுளும்—மதமும்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கடவுள் என்கின்ற உணர்ச்சி மக்களுக்கு எப்போது எப்படி உண்டாயிற்று என்பதைப் பற்றியும், அவ்வுணர்ச்சி மக்களுக்கு எதுவரையும் இருக்க முடியும் என்பதைப் பற்றியும் சுருக்கமாக இதன் முன்னர் எழுதி இருந்தோம். அதாவது மனிதன் உலகத் தோற்றத்திற்கும், நடப்பிற்கும், சம்பவங்களுக்கும் காரணம் கண்டுபிடிக்க முடியாத நிலையில், கடவுள் சக்தி என்றும், கடவுள் செயல் என்றும் நினைத்துக் கொள்வதும், உதாரணமாக, அவற்றிற்குக் காரண காரியம் தோன்றிய பின்பு, அந்நினைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிடுவதும் சகஜம் என்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறோம். இந்த முறையிலேயேதான் கொஞ்ச காலத்திற்கு முன் அநேக விஷயங்கள் கடவுள் செயல் என்று எண்ணியிருந்த மக்கள், விஞ்ஞான (சைய்ன்ஸ்) ஆராய்ச்சி ஏற்பட்ட பிறகு, அவ்வெண்ணத்தை மாற்றிக் கொண்டு, அநேக விஷயங்களை மனிதன் செயல் என்று சொல்லத் தைரியம் கொண்டு விட்டார்கள். உதாரணமாக, கம்பியில்லாத் தந்தி விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். கம்பியில்லாத் தந்தி ஏற்படுத்தியிருக்கும் விஷயமும், அது எப்படிச்செய்யப்படுவது என்கின்ற சைய்ன்ஸ் உணர்ச்சியும் நமக்குத் தெரியாமல் இருக்குமானால், நாம் இன்னமும் அதை "ஒரு தெய்வீக சக்தி" என்றும், பழைய காலத்து ரிஷிகள் பேசிக் கொண்டிருந்ததாய்ச் சொல்லப்படும் "ஞான திருஷ்டிச் சம்பாஷணை" என்றுமே சொல்லித்திருவோம். ஆதலால் மக்களுக்கு அறிவும் ஆராய்ச்சியும் வளர வளர கடவுள் உணர்ச்சியின் அளவு குறைந்து கொண்டே போகும் என்பது திண்ணம். அது போலவே அறிவும் ஆராய்ச்சியும் குறையக் குறையக், கடவுள் உணர்ச்சி வளர்ந்து கொண்டே வரும் என்பதும் ஒப்புக் கொண்டாக வேண்டும். இப்போதும் பகுத்தறிவு குறைந்த மக்களிடமே தான் அநேகமாக, தொட்டதற்கெல்லாம் கடவுளும், அவர்தம் செயல்களும் தாண்டவமாடுவதைப் பார்க்கின்றோம். அவர்கள் மேலேயே "கடவுள் வருவதை"க் கூடப் பார்க்கின்றோம். காட்டுமிராண்டிப் பக்குவமுடையவர்களிடமே அநேகமாகக் கடவுளைப்பற்றிய கதைகள் என்பவைகளும், புராணங்கள் என்பவைகளும் மதிப்புப் பெற்று இருப்பதையும் பார்க்கின்றோம்.

கொஞ்ச காலத்திற்கு முன் அக்கதைகளை அப்படியே—அதாவது கடவுள் சக்தியில் நடைபெற்றது என்று நம்பிக் கொண்டிருந்தவர்கள்கூட இப்போது அப்படியே நம்புவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு, தங்களுக்ுள்ள அறிவு வளர்ச்சியில்லாத் தன்மையை மறைத்துக்கொண்டு, சைய்ன்கின் மூலம் அக்கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக் கொண்டு கஷ்டப்படுகின்றார்கள்.

இதிலிருந்து என்ன ஏற்படுகிறதென்றால், மக்கள் வரவர இப்போது சைய்ன்சுக்குப் பொருத்தமில்லாததை ஏற்க, மறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்துகொண்டிருக்கின்றார்கள் என்பது விளங்குகின்றது. மழையை வரச்செய்வதும், செத்தவனை மறுபடியும் பிழைக்கச்செய்வதும், பேச்சுகளையும் நாட்டியங்களையும் யந்திரங்களில் பிடித்துக்காட்டுவதும் போன்ற காரியங்கள் மனிதனால் செய்யக் கூடும் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு, மிக்க பாமர ஜனங்களுக்குக் கூட இவையெல்லாம், [illegible] செயல் என்கின்ற குருட்டு நம்பிக்கை குறைந்துவருவதில் ஆச்சரியமொன்றமில்லை. எனவே ஒரு காலத்தில் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சிக் கவலையும் இல்லாத போது ஏற்பட்ட கடவுள் சம்பந்தமான எண்ணங்கள், இனியும் இருந்துதான் தீரவேண்டுமா என்றால், அது இருந்துதான் வருகிறது, எப்படியும் அது ஒரு அளவுக்கா

வது—கொஞ்சமாவது இருந்து வரக்கூடும் என்றே சொல்லுவோம்.

ஏனெனில் மனிதன், தான் எல்லாம் அறிந்தவன் என்கின்ற ஆணவத்தை உடையவனாதலால், தன் புத்திக்கு எட்டாததைத் தனக்குத் தெரியவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக்கொள்ளச் சுலபத்தில் சம்மதிக்க இஷ்டப்பட மாட்டானாகையால், அங்கு—அதாவது தனக்கு அறிவு கட்டையாய்ப் போனபோது அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும், கடவுள் செயலும் வந்துதான் தீரும். இதை மாற்றுவது சுலபமான காரியமல்ல. பூரண அறிவு வளர்ச்சி பெற்றால் தான் முடியும். அன்றியும், சிலர் உண்மையை அறிந்திருந்தாலும் சுயநலமோ; மூடப் பிடிவாதமோ காரணமாகத் தங்களுக்கே புரியாதவற்றைப் பேசிப் பாமர மக்களை மயக்கிக்கொண்டும் இருப்பார்கள். ஏனெனில், மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பதாலேயே, அவர்கள் பிழைக்கக் கூடியவர்களாய் இருப்பதினால்தான். எது எப்படி இருந்தபோதிலும் உலகத்தில் கடவுள் சம்பந்தமான குருட்டு நம்பிக்கைக்கு இருந்த மதிப்பு குறைந்துவிட்டதால், கடவுள் உணர்ச்சியும் எப்படியும் மக்களுக்கு வரவரக் குறைந்து கொண்டு தான் போகும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக வருத்தப்படுவதிலோ, யார்மீதாவது குற்றம் சொல்லுவதிலோ பயனில்லை. ஆனால், அவ்விதக் குருட்டு நம்பிக்கையும் மூடப் பிடிவாதமும் ஒழிந்த காலத்தில்தான், உலகத்தில் ஒழுக்கமும், சமத்துவமும், இன்பமும் நிலைபெறும் என்பது மாத்திரம் உறுதி.

மதம்:

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததேயாகும். மனித வர்க்கம் விலங்குகளைப்போல் தனித்தனியே காடுகளில் வாசஞ்செய்துவந்த நிலைமை மாறி, குடிசைகள் கட்டிக் குலாவிவாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்குச் சில கொள்கைகள் தேவையாகிவிட்டது. எப்படி எனில், எப்படித் தனியே இருக்கும் மக்கள் ஏதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து, தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால், உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறதோ, அதேபோல் மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளை நிர்ணயிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகின்றது. அதேபோல் மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளைத் தீர்மானிக்க வேண்டியதாகி விட்டது. அக்கொள்கைகள்தான் இப்போது மதம் எனப்படுவதாக இருக்கிறது. அம்மாதிரியான கொள்கை நிர்ணயங்களை மீறக்கூடாது என்பதற்கு நிபந்தனைகள் ஏற்படுத்தி, அந்நிபந்தனைகளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்க முடியாத நிலையிலோ, அல்லது தண்டிக்கவேண்டாம் என்று தோன்றிய சமயத்திலோ, அல்லது சிலரின் சுயநலத்திற்காகவோ, வேறு விதத்தில் ஏமாற்றிப்பிழைப்பதற்காக வேண்டியோ, அக்கொள்கைகளைக் கடவுள் என்பவற்றுடன் சம்பந்தப்படுவதனால்தான் மக்கள் ஏமாறுவார்கள் என்கின்ற எண்ணம் கொண்டோ, அவற்றைக் "கடவுள் உண்டாக்கினார்" என்றும், அவற்றிற்கு மீறி நடந்தால் "கடவுள் தண்டிப்பார்" என்றும் சொல்லவேண்டியதாய் விட்டது. (இந்த இடந்தான் முதன் முதலாக மனிதன் தவறு செய்த இடமாகும்.) ஆனால், இந்தக் கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி? எந்த ஆதாரங்களைக்கொண்டு? என்று பார்ப்போமேயானால், அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ணஸ்திதி, மக்களின் அறிவு நிலை—அதாவது பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித்திறம் ஆகிய நிலையில்—அதாவது காலதேசவர்த்தமானத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டவைகள் என்றே சொல்லவேண்டும். மேலும், ஒரு குறிப்பிட்ட கொள்கை, பிற்கால தேசவர்த்தமானத்திற்கோ, சிலரின் சுயநலத்திற்கோ ஏற்றதாயில்லாவிட்டால், யாராவது அறிஞர், அல்லது தந்திரக்காரர் அதைமாற்ற நினைக்கும் போது, பாமர மக்கள் மூடநம்பிக்கையின் பலனாய், தங்கள் பிடிவாதத்தைக்காட்டி மாற்றச் சம்மதிக்காத காலத்தில் பிரிந்துபோய்ப் புதியகொள்கைகளை வகுத்து—அதாவது முன்னையதைத்திருத்தியோ, அல்லது சிலவற்றைமாற்றியோ, அல்லது சில புதியன வற்றைச் சேர்த்தோ ஏதாவது ஒன்றைச்செய்ய நேரிடும்போது அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டுவிடுகின்றதும் உண்டு. இதனால் பாமர மக்கள்—அதாவது குருட்டுப் பிடிவாத முள்ளவர்கள் "என் மதம் பெரிது" "உன் மதம்சிறிது" என்கின்ற மதச்சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டு விடுகின்றது.

இந்தச்சண்டையில்லாமல்திருத்தப்பாடு செய்யலாமா? என்று நினைத்த பெரியோர்கள், அக்கொள்கைகளை மாற்றாமல், பழைய கொள்கைகளுக்கே புதிய வியாக்கியானங்களைச் செய்து, திருப்தி செய்ய முயற்சித்து இருக்கின்றார்கள். ஆனாலும், அம்முயற்சிகளின் பலனும், முடிவில் உட்சமயங்களாகவும், சார்புச்சமயங்களாகவும் மாறிற்றேயொழிய, கொள்கைகளின் முக்கியங்கள் திருத்தப்படமுடியாமலேயேபோய் விட்டன. இப்படியேதான் மதங்கள் வெகுகாலமாய் மாறி மாறியும், திரிந்து திரிந்தும், பெருகிக்கொண்டும் வந்ததனாலேயே, மதங்களின் உண்மைத் தத்துவமும், அவசியமும் அறிவதற்கில்லாமற் போனதோடு, அதை ஒரு சடங்காகவே கொள்ள வேண்டியதாகியும் விட்டது. இன்றையத்தினம் எந்த மதக்காரனையாவது கண்டு உன் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன? என்றால், சிலசடங்குகளையும் குறிகளையும் மாத்திரந்தான் சொல்லுவானே ஒழிய அதன் உண்மைத்தத்துவம்—அதாவது எந்தக் கருத்தைக்கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அதைக்கூற மாட்டான்; அறிந்திருக்கவும் மாட்டான். அதோடு அம்மூலக் கொள்கைக்கு நேர்விரோதமாக அறியாமையும் ஒழுக்க ஈனங்களும் புகுந்துவிட்டதன்றி, சிலர் அவற்றைத் தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் கருவியுமாய்விட்டது. சிறப்பாக இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றி—கொடுமைப் படுத்தி—பணம் பறித்து, புரோகிதக் கூட்டமும், அரசாங்கமும், செல்வவந்தனும் பிழைக்கும் மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றிப் பொதுவாக மனித வர்க்கத்திற்கு எவ்விதப் பலனும் இல்

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

[உரிமை ஆசிரியருக்கே]

—(புலவர் குழந்தை)—

அகத்திணை.

அகத்திணை அல்லது அக வொழுக்கம் என்பது, ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் வாழ்க்கை முறையைப் பற்றிக் கூறுவதாகும். (திணை—ஒழுக்கம்) அது, கைக் கிளை, அய்ந்திணை, பெருந்திணை என ஏழுவகைப்படும். கைக் கிளை—ஒருதலைக் காமம். தலை வனிடத்து மட்டும் நிகழும் காமம். அய்ந்திணை—ஒத்த காமம். இது தலைவன், தலைவி இருவருள்ளத் தையும் என்றும் இணைபிரியாமல் பிணித்து, இன்ப வாழ்வு வாழச் செய்வதால் "அன்பின் அய்ந் திணை" எனவும் படும். பெருந் திணை—பொருந்தாக் காமம். அதாவது ஒவ்வாத, தகாத காமம். அவ்வகத்திணை ஒருதலைக் காமம், ஒத்த காமம், ஒவ்வாக் காமம் என மூன்று வகைப்படும்.

அகப்புறம்.

நம் முன்னையோர், தத்தமக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவரைத் தாமே தேர்ந்தெடுத்து, அன் பொத்து இன்புற்று இனிது வாழ்ந்து வந்தனரேனும், ஒரு கட் டுப்பாட்டுக்குட்பட்டு, வாழ்க்கை முறைக் கொவ்வாதவற்றைவிலக்கி, ஒத்த முறைகளையே கைக் கொண்டொழுகிவந்தனர். அக் கட்டுப்பாட்டை மீறி எவரும் நட வார். இளமையிலிருந்தே ஏற்ற வாழ்வின் இலக்கணங்கள் அறி வுறுத்தப்பட்டுவந்தன. அதன் படியே காதலர்கள் நடந்து, அன்பு முதிர்ந்து மணம் செய்துகொண்டு வாழ்ந்துவந்தனர். இவ்வாறு ஒத்த அன்புக்கு, ஒவ்வாத வழியில் சிலர் நடக்கவும் கூடுமாகையால், அவ் வாறு நடக்கத் தகாதவை இன்ன வென்று எடுத்துக்காட்டி விலக்கி னர் ஆசிரியர். அவைதாம் கைக் கிளை, பெருந்திணை என்பன. இவை ஒத்த காமமாகிய அகத்திற் குப் புறம்பானவை யாகையால் அகப்புறம் எனப்பட்டன.

கைக்கிளை.

(1) பூப்பு எய்தியும் காமக் குறிப்புத் தோன்றாத ஒருத்தியை யேனும், பூப்பெய்தாதவளை, அதாவது பருவமாகாத பெண் ணைப், பூப்பெய்தினாளெனக் கொண்டேனும், ஒருவன் அவளைக் காதலித்துக் குறிப்பால் தன் காத லை வெளியிட, காமக்குறிப்புத் தோன்றாத அவள், இவன் குறிப் பை அறியாது சும்மா இருக்க, அதனால் அவன் பெருந்துன்ப மடைவான். (2) அங்ஙனம் அவ ளிடமிருந்து எதிர்க்குறிப்பைப் பெறாத அவன், நான் சும்மா போக, தன்னுடைய பேரழகி னால் என் மனத்தைக் கவர்ந் தனள். ஆகையால், நான் குற்ற முடையவனல்லன். அவள்தான் குற்றமுடையவள் என்று, தான் நல்லவனென்றும், அவள் கெட்ட வளென்றும் கூறிக்கொள்வான். (3) காமக்குறிப்புடையவளானால் எதிர்மொழி கூறுவாள். காமந் தோன்றாத பெண் எதிர்மொழி கூறாது செல்லவே, தான் மட்டும் இவ்வாறு சொல்லி இன்புறுவான். அவள் நில்லாது செல்லவே, காமக் குறிப்புத் தோன்றாதவளென்ப தையுணர்ந்து, அவளை விட்டுச் செல்வான். இவ்வாறு ஒரு சிலரி டம் நிகழும். இது ஒத்தகாமமா கிய களவொழுக்கத்திற்குப் புறம் பானதாகையால் கூடாதென விலக் கப்பட்டது.

தோளும் மார்பும் பெருத்தல், கண்பிறழ்தல் முதலிய பெண்மைப் பருவக்குறிகள் தோன்றியும், பூத் தற்குரிய ஆண்டு நிரம்பியும் சில பெண்கள் பூக்காமல் இருப்ப துண்டு. பூத்தும் சில பெண்களுக் குக் காமவுணர்ச்சி தோன்றாமல் இருப்பதுண்டு. இவை உடற்கூற் றின் இயல்பாகையால், அவ்வகைப் பெண்ணொருத்தியைக் கண்டு அவள்மேல் காதல் கொண்ட ஒரு வன், தனது காமக்குறிப்புக்கு அவள் எதிர்க்குறிப்புத் தராமல் செல்வாளாயின் அதையறியாத அவன் 'இவள் ஏன் இவ்வாறு செல்கிறாள்? நமது குறிப்பை அறிந்து கொள்ளவில்லையோ? என எண்ணித்தனது காதலுணர்ச் சியைப் பொறுத்துக்கொள்ள முடி யாமையால் பெருந் துன்பமடை வான். அங்ஙனம் துன்பமடைந் தவன், "ஏ! அழகிய பூங்கொடி யே! மணத்தாலும், நிறத்தாலும் என் மனத்தைக் கவர்ந்து நீயன்றோ என்னை வருத்தினை? அதனால், நீயே குற்றமுடையாய். நான்குற்றமுடையேனல்லன்" என 'முன்னிலைப் புறமொழி' கூறு வான். காமக்குறிப்பு அரும்பாத வளாகையால், அவன்கூறிய குறிப்பு மொழியை அறிந்து, எதிர்மொழி கூறாதிருக்கவே, தன்காதற் பெருக் கால் சில இன்பமொழிகளைக் கூறித் தானே இன்புறுவான். அதையும் உணராது அவள் செல் வாளாயின், அவள் காமப் பருவத் தாள் அல்லள் என்பதையுணர்ந்து அவள்மேல் கொண்ட காதலை விட்டுச் செல்வான்.

இக்கைக்கிளைக் குறிப்பு மூன் றும் ஓரே நாளிலன்றிப் பல நாட்க ளிலும் நிகழும். ஒன்றிரண்டு நிகழ்ந்து நீங்குதலும் உண்டு. இக் குறிப்பு மூன்றும் ஒருவன் ஒருத்தி யின் ஒருமனப் பாட்டுக்குக் கார ணமாகாது, ஆண்பாலிடத்து மட் டும் ஏற்பட்ட காமமாகையால், வாழ்க்கை முறைக்கு ஏற்றதன் றென நம் முன்னையோர் விலக்கி வந்தனர். இதையறியாதார், 'தமிழ் நாட்டில் சிறுமிகளை விரும்பி மணந்த வழக்கம் முன்பிருந்தது' எனக் கூறுவாராயினர். அவர் கூற்றுக் கொள்ளத்தக்கதன்று.

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

புளுகு மூட்டை.

கண்ணன்.

★

"வேலைக்காரி" படம் ஓடிக்கொண்டிருக்கிறது. சரசா கண்ணன் பாட்டுப் பாடிக்கொண்டிருக்கிறாள்: "ஆட வருவாயா கண்ணா! என்னோடு விளையாட வருவாயா கண்ணா" என்று இவ்விதமாகப் பாடல் செல்லுகிறது. கணவன் ஆனந்தன் வருகிறான். மனைவியைக் கண்டிக்கிறான்; "யாரை நினைத்தடி பாட்டுப் பாடினாய்?" என்கிறான். "சாமி மேலே பாட்டா இது? ஆசை நாயகனை அழைப்பது போலத்தான் ஆண்டவனை அழைப்பதா? அதெல்லாம் இல்லை. சாமி மேலே சாக்கு வைத்து, யாரையோ மனசிலே நினைத்து, சரசப் பாட்டுப் பாடியிருக்கிறாய்! யாரையடி அது?" என்று 'பளார், பளார்' என முதுகில் அறைகிறான்..............

என் சிந்தனையும் ஓடிக்கொண்டிருந்தது. சரசா மட்டும்தானா பாடுகிறாள் கண்ணன் பாட்டு. பரத நாட்டியப் பதங்கள் யாவும் பெரும்பாலும் கண்ணன்மீதுதான். அத்தனையிலும் சிருங்கார ரசம் ததும்பும். காமச் சுவையே மிதமிஞ்சிக் கலந்திருக்கும். கல்யாணமான கன்னிகையரும் கண்ணனை நினைத்துப் பாடுவது சகஜமாகிவிட்டது இந்த நாட்டில். இத்தகைய ஒரு ஸ்திரீலோலன் கடவுளாகவும் காட்சியளிக்கிறான் இங்கே. காந்தியார், ஆச்சாரியார் முதல் காமராஜர், ஓமந்தூரார்வரை 'கண்ணன் திருவடி எண்ணுக மனமே' என்று உபதேசிக்கிறார்கள். காமக் கூடத்திலிருந்து அரசியல் துறை வரையிலும் இரண்டறக் கலந்துள்ள இந்தக் கண்ணன் யார்?

"புல்லாங்குழல் கொண்டுவருவான் கண்ணன்"—எங்கேயோ வானொலி அலறிக்கொண்டிருப்பது ஈன சுரமாகக் காதில் விழுந்தது.......ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஆகா! சாட்சாத் கண்ணனே என் கண்ணெதிரில், புல்லாங்குழலும் கையுமாகப், புன்னகையும் வாயுமாக வந்துகொண்டிருந்தான். நேற்றிரவு "பவளக்கொடி"யில் பார்த்ததுபோலவேயிருக்கிறான்.

கண்ணா வா! மணிவண்ணா வா! உன்னைக் காணத்தான் காத்திருக்கிறேன்."

"தடையென்ன! யார் எப்போது எந்த ரூபத்தில் விரும்பினாலும் வருவேனே! அன்றே கீதையில் உபதேசித்ததும் இதுதான்"

"ஆனால் பிராமணர்களுக்கு ஏதாவது இடைஞ்சல் வந்தால்தானே நீ வருவது வழக்கம். இப்போதுகூட எங்கள் நாட்டில் 'மவுண்ட்ரோடு மகாவிஷ்ணு' வாக அவதரித்திருப்பது நீதானே?"

"ஆமாம். அப்படித்தான் மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் என்னைக் கற்பித்து—வளர்த்துவரும் பிராமணர்களை நான் காப்பாற்றவேண்டியது நியாயந்தானே!"

"அதுசரி, ஆனால் ஒருவிந்தை, காந்தியார் எப்படி வைசியராயிருந்தும் பார்ப்பனீயப் பாதுகாவலராயிருந்தாரோ, அதுபோலவே நீ யாதவ குல திலக மாதவனாயிருந்தும் இந்நாட்டில் பிராமணீயம் வளரவே பாடுபட்டு வந்திருக்கிறாய்."

"என்ன செய்வது? 'விதியும் அவர் ஏவ நிற்கும்' என்றான் கம்பனும். அவர்கள் நினைத்தால் ஆகாததில்லை. அவர்களை விரோதித்து வாழ்ந்தவர் யார்?"

"ஏன் எங்கள் பெரியார்......!"

"அவர் கதையே வேறு. அவர்தான் அடிப்படையிலேயே கடப்பாரையைக் கொடுத்து நெம்பிவிட்டாரே, தம்பி!"

"இதெல்லாம் கிடக்கட்டும். உன் கதையே மிகவும் விசித்திரமாயிருக்கிறதே கண்ணா! காம லீலையில் கரை கடந்த நீ எப்படிக் கடவுளானாய்?"

"ஆனேனா? ஆக்கப்பட்டேனப்பா! எங்கேயோ சிறைக் கூடத்தில் தேவகி—வசுதேவபுத்திரனாய்ப் பிறந்தேன். வளர்ந்தது பூராவும் யசோதையிடம், கோகுலத்தில். அங்குதான் என் கோலாகலக் கூத்து முழுதும். சிறு வயதிலேயே வெண்ணெய் திருடப்பழகிக்கொண்டேன்."

"சிறையில் பிறந்ததால் வந்த கோளாறோ?"

"இருக்கலாம். வெறும் வெண்ணெயைத் தின்றதாலேதான் உடலில் அளவுக்கு மீறிய வளர்ச்சியும், திமிரும் ஏற்பட்டுவிட்டன. இளமையிலேயே எனக்குக் காமக் கலையை வேறு கற்பித்துவிட்டாள் ராதை. அதனாலேதான் 'ருசி கண்ட பூனை உறியைத் தாவுவது'போல என வாழ்நாள் எல்லாம் பெண் பித்துப் பிடித்து அலைய நேரிட்டது."

"ராதை மணமானவள்தானே?"

"ஆம்; அதுமட்டுமல்ல. என்னைவிடப் பதினாறு ஆண்டு மூத்தவள். கணவனிடம் இச்சையில்லை. நான் குழந்தையாயிருக்கும் போதே என்னைச் சதா தூக்கிக் கொஞ்சிக் கொண்டிருப்பாள். மார்போடணைத்து மனங்குளிர்வாள்.........இப்படியே செய்துகொண்டிருந்தவள், நான் சற்றுப் பெரியவனானதும், தன் காமப் பசி தணிக்கும் கருவியாகவும் என்னை ஆக்கிக்கொண்டாள். இவள் அரைக்கணமும் என்னைப் பிரிவதில்லை. ஊரே எங்கள் நடத்தையைப்பற்றித் தூற்றியது. ஆனால் எனக்குத் தெய்வாம்சம் கற்பித்துத்தன் நடத்தையைப் புனிதப்படுத்திக் கொண்டாள் ராதை. இதனால்தான் எத்தனையோ மணமான மங்கையர், தகாத வழியில் என்னை நாடுவது சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாகிவிட்டது இந்த நாட்டில்......"

"சக்குபாய், மீராபாய் காலத்திலிருந்து கண்ணனை நம்பிக் கணவனைக் கைவிட்ட காரிகையர் எண்ண முடியாத அளவு இருப்பரே."

"ஆம். ராதையின் முயற்சியால் பிஞ்சிலேயே பழுத்த நான் வெண்ணெய் திருடுவதைவிட்டுப் பெண்ணையே திருடவும் தொடங்கினேன். ஆற்றோரம், குளத்தோரம் சுற்றித்திரிந்தேன். நீராடும் மங்கையரின் ஆடைகளைத் திருடுவதும், அவர்களை நிர்வாணமாய் கரைக்கு வரச்செய்வதும், இப்படியாக என் காமக் களியாட்டங்கள் கணக்கிலடங்காத முறையில், கோகுலம் முழுவதுமே என் கை படாத கன்னியரே இல்லை எனும்படிக்கு ஆய்விட்டது!"

"ஆனால் என்ன? இவ்வளவு பெரிய 'டஞ்சுவான்' ஆன உன்னையோ, உன் செயல்களையோ இழிவாகப் பேசுவோர் ஒருவர்கூட இல்லையே இன்றும். அன்று போலவே உனக்கு ஆலயங்களும், அர்ச்சனைகளும், தேர் திருவிழாக்களும், பஜனைகளும், உன் கோலாகல லீலா விநோதச் சித்திரங்களும், சிற்பங்களும் இன்றும் குறைவில்லாமல்தானே இருந்து வருகின்றன! உன்னைக் கடவுளென்று கும்பிடக் கூசுகின்றனரா எவரேனும்? கண்ணன் காட்டிய வழியைக் கடைப்பிடியுங்கள் என்றுதானே தலைவர்களும் கூறுகின்றனர். கீதைதானே வாழ்வின் பாதையென்கின்றனர். நீக்ரோ, எஸ்கிமோ இனத்தார்கூட இதைக் கேள்விப்பட்டால் எள்ளி நகைப்பார்கள். ஆனால் இங்குள்ள படித்த முட்டாள், தன்னை இந்துவென்று கூறிக் கொள்ளப் பெருமையடைகிறானே! இந்த நாடு இன்னும் ஆயிரம் ஆண்டு சென்றாலும் கடைத்தேறுமா?"

"வீணாக ஏனப்பா துடிக்கிறாய்? காங்கரஸ் உள்ளவரை கண்ணனுக்குப்

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

போலிக் கூட்டமும் கேலிக் கூத்தும்!

திருவாரூரில் இந்த மாதம் 16, 17-ம் நாட்களில் 'தமிழ்த் திருநாள்' என்றபெயரில் இரண்டு நாள் கூட்டம், தோழர் ஓ.பி.ராமசாமி (ரெட்டியார்) அவர்கள் தலைமையில் நடைபெற்று, பார்ப்பன-தேசீயப் பத்திரிகைகளில் பிரமாதமாகச் செய்தி வெளிவந்திருக்கிறது.

இந்த வெளிச்சம் ஏன்?

ஒருலட்சம், ஒன்றரைலட்சம் மக்களுக்கு மேலாகக்கூடும் மாநாடுகளையே முழு இருட்டடிப்புச் செய்துவிடும் இந்தப் பத்திரிகைகள், இதனைப்பற்றி இரண்டு மூன்று நாட்கள்வரை விடாது செய்தி தருவானேன்? இப்படி வெளிச்சம் போடுவதற்குக் காரணம் என்ன?

சென்னையில் மிக மிகச் சிறப்பாக, இரண்டு நாள் நடந்த திருக்குறள் மாநாட்டைப் பற்றிச் சிரத்தை காட்டாத பத்திரிகைகளுக்கு, அதாவது முயற்சிக் குறைவோடு, பொருள் செலவு இல்லாத நிலையில் செய்தியைத் தருவதற்கு வாய்ப்பிருந்தும், அந்த வாய்ப்பை "தமிழர்களின் தனிப் பெருமையை, உயர்வை நிலை நாட்டுவது" என்ற கருத்தால், பயன் படுத்தாமல் தட்டிக் கழித்த இந்தப் பத்திரிகைகளுக்கு, இந்தத் திருவாரூர்க் கூட்டத்தின் மீது ஏற்பட்ட தனிக் காதல் என்ன?

தமிழரின் பெருமைக்குரிய—தனிச்சிறப்பு வாய்ந்த—எவராலும் இன்றும் ஏத்தப்படும் நிலையைப் பெற்றிருக்கும் தொன்மை நூலாகிய திருக்குறளுக்குத் தனிச் சிறப்பு மாநாடு! குறிப்பாகச் சோமசுந்தர பாரதியார், மீனாட்சி சுந்தரனார், திருக்குறள் முனுசாமி, சாத்தூர் வழக்கறிஞர் கந்தசாமி, பேராசிரியர் சக்கரவர்த்தி (நயினார்) ஆகிய பேரறிஞர்களையெல்லாம் கொண்டு, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களே வரவேற்புக் கழகத் தலைவராக இருந்து நடத்திய அந்த மாநாட்டு நிகழ்ச்சிகளை, சென்னையிலேயேயுள்ள ரேடியோ நிலையத்தார், ஒலிபரப்பும் ஏற்பாட்டைச் செய்ய வக்கத்தவர்களாயிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு, திருவாரூர் தேடிச்சென்று இதை ஒலிபரப்ப வேண்டியகட்டாயம் என்ன வந்ததோ?

அச்சமும்—ஆவலும்.

குறள் மாநாடு தமிழ் வளர்ச்சி கருதும் தமிழறிஞர்கள் நடத்துவது. இதனை ஒலிபரப்பினால் தமிழ்ப் பொதுமக்கள் விழிப்படைந்துவிடுவார்கள் என்கிற அச்சமும், திருவாரூர் "திருநாள்", தமிழின் பெயரால் சில சுயநலக் கூட்டத்தார் நடத்தும் கேளிக்கை; எப்படிப் பாட்டுகளைப் பொழுது போக்குக்காக ஒலிபரப்புகிறோமோ அப்படிப், பொழுது போக்க ஒலிபரப்ப வேண்டியதே திருவாரூர் நிகழ்ச்சி; மேலும் தமிழரின் பண்பாட்டைக் குலைக்கும் ஒரு சூழ்ச்சி விழா என்கிற ஆவலும் தானே வானொலி நிலையத்தார் கொண்டிருக்கவேண்டும். வானொலி நிலையம் சர்க்காருடையது. ஆனால் யாருடைய, எப்படிப்பட்ட ஆதிக்கத்திலிருக்கிறது என்பதற்கு, இதைக் காட்டிலும் சிறந்த எடுத்துக் காட்டுவேண்டுமோ?

தமிழ்த் திருநாளா?

உண்மையிலேயே திருவாரூரில் நடந்தது தமிழ்த் திருநாளா? தமிழுக்கோ தமிழருக்கோ இந்தத் திரு நாளால் ஏதாவது பெருமையோ நன்மையோ உண்டா? இது கூட்டப்பட்டதின் உண்மை நோக்கம் என்ன? இதன் முன்னணியும் பின்னணியும் யார் யார்? அங்கு நடந்திருப்பதென்ன? அதற்குக் கூடிய கூட்டம் எவ்வளவு? யாருக்கு மரியாதைகாட்ட இந்தத் 'திருநாள்'?

ஒரு பார்ப்பனப் பத்திரிகை, பெண்கள் உள்பட 10-ஆயிரம் மக்களுக்கு மேல் கூடியிருந்தார்கள் என்று கூறுகிறது. மற்றொரு பத்திரிகையோ 30-ஆயிரம் என்று இதனையே வருணிக்கிறது. இரண்டு பார்ப்பனப் பத்திரிகைகளே இப்படிக் கூறுமானால், உண்மையில் கூட்டமிருந்திருக்கும் நிலையைப் பற்றிப் பிறர் கூறித் தெரிய வேண்டியதில்லையல்லவா?

இந்தத் திருநாளை, முக்கியமாகத் திருவாரூரில் நடத்திய பெருமை, புது தீவிரத் தேசியவாதியான (மாஜிராவ்பகதூர்) வி. எஸ். தியாகராஜ (முதலியார்) ருடையது. இவரால் அமர்த்தப்பட்ட வரவேற்புக் கழகத் தலைவர் 'வெத்து வேட்டு' வேதரத்தினம். இந்த வரவேற்பாளர், தன்னுடைய வரவேற்புரையில் கூறும் 'பொன்னான' மொழிகளை, தமிழ் வளர்ச்சி கருதும் ஒவ்வொரு தமிழரும் மறந்துவிடக் கூடாது என்பது அவரின் நம்பிக்கையான எண்ணம். அப்படி அவ்வளவு சிறப்பாக அவர் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? உயர்ந்த கருத்து! இன்றுவரை தமிழரிடம் யாரும் வெளியிடத் துணியாதது!

"தமிழ் ராஜாங்க பாஷையாக இருக்க வேண்டியதில்லை"—மாநாட்டு வரவேற்பாளரின் முதல் முடிவு.

"பிறமொழியிலுள்ள சொற்களை தமிழில் கையாள யாரும் தயங்கக் கூடாது" இது அவரின் இரண்டாவது முடிவு.

இந்த முடிவுகளோடு வரவேற்கப்படும் இந்தத் திருநாள், தமிழ் வளர்க்கும் தனிப்பெரும் திருநாள் அல்லவா?

இந்தத் திருநாளுக்கு வரவழைக்கப்பட்ட பெரியவர்கள், தமிழுக்காக எவ்வளவு காலம் பாடுபட்ட—தமிழ்ப் பண்பாடு வாய்ந்த—தமிழர் நாகரீகத்தைப் பேண வேண்டும் என்கிற தனிச் சிரத்தை கொண்ட—பேரறிஞர்கள் தெரியுமா? ஒரு பார்ப்பனப் பத்திரிகையின் வருணனைப்படி அல்லது வரிசைப்படி 'சந்தானம் (அய்யங்கார்) முதல் ஓ. பி. ராமசாமி (ரெட்டியார்) வரை வந்திருக்கிறார்கள். இப்படிக் கடைசி இடம் பெற்ற ஓமந்தூராருக்கு இந்தத் திருநாளில் ஒரு அற்பமான வேலை(!) ஆகிய தலைமைப் பதவி. ஓமந்தூரார் தலைமை

வகிக்கப்போகும் அந்த நாளைத், திறந்து வைப்பவர் சந்தான மய்யங்கார்!

அய்யம் வலுக்குமே!

தமிழ்த் திருநாளைத் துவக்கிய சந்தானமய்யங்கார், என்னசொன்னார் என்பதாக மித்திரன் கூறுவதைப் பார்த்தால், இந்தத் திருநாள் எதற்காகக் கூட்டப்பட்டது என்கிற அய்யப்பாடு எவருக்குமே வரத்தான் வேண்டும்.

தமிழ் நாட்டில் 'திக் விஜயம்' செய்ய வந்திருக்கும் இந்துஸ்தான் மந்திரி—பார்ப்பனர்—தமிழ்த் திருநாள் துவக்குவிழாப் பேச்சுப் பேச வந்தவர். ஆனால் பேசினாரா? இல்லை, எச்சரித்தார் என்கிறது மித்திரன். எச்சரிக்கை விடுவது யாருக்கு? எதற்கு? தமிழ்மேல் காதலுள்ள தமிழருக்கு! அவர் என்ன எச்சரிக்கைசெய்கிறார்?

"தாய்ப்பாஷை வளர்ச்சியில் உள்ள ஆர்வத்தில் பிறமொழிகளின் மீது வெறுப்புக்கொள்ளக் கூடாது'' என எச்சரித்தார், என்கிறது மித்திரன்.

"பிறமொழிகளைக் கூடுமானவரை கற்றுக்கொள்க!''— இது அவரின் ஆலோசனை. இந்த அளவோடு நிற்கவில்லை, "பிறபாஷை சொற்களைச் சேர்த்துக் கொள்ளத் தமிழ் வளர்ச்சியில் நாட்டம் கொண்டவர்கள் தயங்கக்கூடாது'' என்பதாக அந்த அருமையான புத்திமதி கலந்த எச்சரிக்கை முடிகிறது.

"உன் மனைவியிடம் அன்பாயிரு! அவள் மேலுள்ள அன்பால் அவளைச் சேரவரும் பிற ஆடவனை வெறுக்காதே! கூடுமானவரை அவனையும் அனுசரித்து நட! அவள் நலத்தில் அக்கரையுள்ள நீ, பிறன் கலப்பைக் கண்டு தயங்கக் கூடாது!'' என்று ஒரு குடும்பஸ்தனுக்கு மற்றொருவன் யோசனையோ — எச்சரிக்கையோ செய்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் குடும்பஸ்தனுக்குச் செய்யப்பட்ட எச்சரிக்கைக்கும்—அய்யங்காரின் அருமையான எச்சரிக்கைக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?

மூடநம்பிக்கைக்கு ஊர்வலம்.

இப்படி அருமையான எச்சரிக்கையுடன் துவங்கிய தமிழ்த் திருநாள்வைபவத்தின் முதல்கட்டம், வாத்தியக் கச்சேரியுடன் யானை மீது ஓலைகளை (ஏட்டுப் பிரதிகளை) வைத்து, கோயில் பிரதானத் தெருக்களை ஊர்வலம் வந்திருக்கிறது. இது தமிழுக்கு வளர்ச்சியா? மூடபக்திக்கு வளர்ச்சியா? ஒரு சிறு பொம்மையை, பல ஆயிரம் டன் எடையுள்ள தேரில் ஏற்றிப், பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி இழுக்கும் "பெருமைக்குப்'' பேர் பெற்ற திருவாரூரில்தான் இது நடந்திருக்கிறது என்பதை எண்ணாமல், இந்த வருஷத்தில் தேர்த் திருநாள் இல்லை என்பதற்காகப் பக்த சிரோன்மணிகள் வேறு முணுமுணுக்கிறார்களாம்!

இவ்வளவு சிறப்பான மாநாட்டின் தலைவர், மதிப்பிற்குரிய ஓமந்தூர் ராமசாமி அவர்கள். அங்கு, அவர் எவ்வளவு சிறப்பாகத் தமிழின் பெருமையை விளக்கியுள்ளார் தெரியுமா? முதல் பல்லவி, தலபுராணம் பாடுவதில் ஆரம்பம். இந்தத் தமிழ்த் திருநாள், முதலாவது தடவையாகச் சென்ற ஆண்டில் மதுரையில் நடந்தபோதும் இதுதான் நடந்தது. தலபுராணம் பேசும்போதே பொய்க் கதையை—மூடநம்பிக்கையை எடுத்துக் காட்டிப் பெருமைப்படுகிறார் ஓமந்தூரார். எத்தனையோ பஞ்சமாபாதகர்களும் கண்ணெதிரே நடமாடும் அவ்வூரில் "பிறக்க முக்தி'' என்ற புகழ் கூறி, மாட்டின் கன்றுக்காக மகனைக் கொன்ற மன்னனின் மாபெரும் நீதியை எடுத்துக் காட்டிப் பூரிக்கிறார் மாஜி போலீஸ் மந்திரி ஓமந்தூரார். நீதியின் பேரால், இந்தி எதிர்ப்புக்காரர்களுக்குத் தானிழைத்த கொடுமைக்கு, நிம்மதி தேடும் முயற்சியாயிருந்தால் இருக்கட்டும். ஆனால் இது எவ்வளவு அர்த்தமற்ற ஒரு கட்டுக்கதை என்பதை இங்கு எடுத்துக்காட்டுவோம். இந்த மனுநீதிச்சோழன் கதையை, கி. பி. 2ம் நூற்றாண்டில் வாழ்ந்தவள் என்று சொல்லப்படும் கண்ணகி, பாண்டியன் முன்னால், சோழநாட்டின் நீதிச் சிறப்பைச் சொல்லும் போது எடுத்துக் காட்டியதாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறுகிறார். கண்ணகி வாழ்ந்த 2ம் நூற்றாண்டில் சோழர்க்குரிய தலை நகரம் எது? சோழர்கள் திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டது எப்போது? திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டு சோழர்கள் ஆண்டது 8ம் நூற்றாண்டு என்றால், 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த கண்ணகியும் அந்தக்கதையைக் கூறியிருக்கிறாள் என்பதாகச் சிலப்பதிகாரம் கூறும்போது, இது உண்மையில் நடந்திருக்கக் கூடியதா? அல்லது கர்ண பரம்பரையாக ஆரியரால் கட்டிவிடப்பட்டு வழங்கி வந்த ஒருகட்டுக்கதையா? என்பதை ஓமந்தூரார் யோசனைக்கு விட்டு விடுகிறோம்.

இந்த இரண்டு "வரலாற்றுச் சிறப்போடு'' சுந்தரமூர்த்தி எனும் பார்ப்பானுக்காக, ஆண்டவன் பரவையிடம் தூது சென்றதாக (பார்ப்பானுக்காகக் கடவுள் எதையும் செய்வார் என்பதைக் காட்டுவதற்காக) புனையப்பட்ட மற்றொரு வரலாற்றுச் சிறப்பைக் கூறி, சீர்திருத்தக் கலப்பு மணம் நடந்த திருவாரூர் என்று இறும்பூதெய்துகிறார்!

இந்தப் புளுகுமூட்டைப் புராணங்களுக்குப் பின், உண்மையிலேயே தமிழுக்குரிய சில பெருமைகளை அவர் எடுத்துக் காட்டுகிறார். அகத்தியன் பேரால் அலங்கோலம் புகுவதற்குமுன், தமிழ், இயல் இசை நாடகம் எனும் மூன்று பிரிவுகளோடு இருந்ததென்றும், தமிழ் மக்கள் தமிழ் மொழியைப் பேணிக் கையாளாமையால்—அதனிடம் பற்றுளங்கொண்டு படித்து அறநெறியில் பழகாமையால், மொழி வளர்ச்சி, தமிழ்ப் பண்பு வளர்ச்சி இவைகளில் இன்று குறைவுபட்டு நிற்கிறோம் என்றும் கூறுகிறார். ஆனால் தமிழர்கள் தமிழை ஏன் பேணவில்லை? எதனால் தமிழ்ப்பண்பில் தமிழர்க்குப் பற்றுள்ளம் இல்லாமல் போயிற்று? இதை அவர் விளக்கவில்லை. இடையிலே கம்ப புராணத்தை வேறு இணைத்திருக்கிறார்.

நாம் நெடுங்காலமாகக் கூறி, வழக்கத்திலும் ஓரளவுக்குக் கையாண்டு கொண்டுவரும் முறையை, 'தமிழ் வளர்ச்சிக்கு தமிழில் உள்ள எழுத்துக்களை, ஆங்கிலத்தில் உள்ளது போல் எண்ணிக்கையில் சுருக்கி, எளிதாக்கவேண்டும்'' என்பதை வலியுறுத்தியுள்ளார். கடைசியாகக் கடவுளுடன் மொழியைப்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

இங்கர்சால் சொற்பொழிவு.

ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

அவர் (புனித கர்த்தர்) தம் கைப் பாவைகள் போரிட்டுத் தோல்வியடைவதையும், ஒருவருக்கொருவரையும், தம்மைதாமாகவும் இகழ்ந்துரைத்துக் கொள்வதையும் பார்த்துக்கொண்டிருக்கிறாராம். தவறுகளுக்கு அழைத்துச் சென்றும்; பிறப்பையும், இறப்பையும் கவனித்துக் கொண்டும்; தொட்டிலில் தாலாட்டப்படுவதையும், விலங்கில் தாமாக அகப்பட்டுக் கொள்வதையும் கேட்டுக் கொண்டிருக்கிறாராம். அவருக்கு இரக்கம் கிடையாது. துக்ககரமானவைகளையும், துணிவையும், விருப்பங்களையும், கொலைகளையும் மகிழ்ச்சியாகக் கவனித்துக் கொண்டிருக்கிறாராம். அவர் கொலைகளையும், கற்பழிக்கப்படுவதையும், ஏமாற்றுவதையும், குழந்தைகளை வருத்துவதையும் கண்டு புன்னகை கொள்கிறாராம். வலிவற்ற அடிமைகளையும், குழவிகளைப் பறிகொடுத்த தாய்மார்களையும், இருட்டறையிலுள்ள அறியாமையாளரையும், பார்த்துக் கொண்டிருக்கிறாராம். தவறு முடி சூடப்படுவதையும் அக்ரமம் மதிக்கப்படுவதையும் பார்க்கிறாராம்.

மழையை நிறுத்திவிட்டு அவர் கைப்பாவைகளைப் பட்டினிகிடக்கச் செய்கிறாராம். பூமியை வெடிக்கச் செய்து, மக்களை விழுங்கச் செய்கிறாராம். வெள்ளத்தைப் பெருக்கெடுத்தோடச் செய்து, மக்களை மூழ்கச் செய்கிறாராம். பூகம்பம் ஏற்படுத்தி மக்களை நெருப்பில் அமிழச்செய்கிறாராம். புயலை ஏற்படுத்தி மக்களை கிழித்து, சின்னாபின்னப்படுத்தச் செய்கிறாராம். மின்னலினால் பலரைக் கொலை செய்தாராம். காற்றினும், நீரினும், கண்ணுக்குத் தெரியாத எதிரிகளால்—(கிருமிகளால்) வலியின் தூதுவர்களால் நிரப்பி, மக்கள் அதை வளிப்பதையும், அருந்துவதையும் பார்த்துக் கொண்டிருக்கிறாராம். இராசப்பிளவையை உண்டு செய்து அவர்கள் தசை நரம்பில் உயிர் வாழவும், பாம்புகளை அவர்கள் நரம்பில் நஞ்சைக் கலக்கவும், மிருகங்களை அவர்கள் எலும்பை முறிக்கவும், குருதியை உறிஞ்சவும் ஏற்படுத்தினாராம்.

சில மக்களை மூடர்களாகப் பிறப்பித்து இருளில் உழலவும், கற்பனையில் கண்ட பயங்கரங்களால்மங்கிய கண்ணோடும், நடுங்கிய தாடையோடும்வாழவும்; வேறு சிலரைச் சிந்தனையின் சுடரே இல்லாமல், இருட்டில்உழன்று உயிர்வாழவுமாக அமைத்திருக்கிறாராம். எல்லா அக்ரமங்களையும், அநீதிகளையும், பஞ்சத்தின் கிழிசல்களையும், நடுங்கும் கைகளின் தேவைகளையும்; தாயில்லாக் குழந்தைகளின், அபோக்கியர்களின், நோயாளிகளின், குட்டரோகிகளின் கண்களிலே ஓடும் கண்ணீரைக் கண்டும்; சோக—துக்கக் குரல்களைக் கேட்டும், வாள் வீச்சின் பளபளப்புகளைக் கண்டும், குருதியினால் சிவந்த நிலங்களையும், மடிந்தோரின் வெளிறிய முகங்களையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறாராம்.

ஆயினும் கடவுள்கள் மனிதக் குழந்தைகளைக் காப்பாற்றியது கிடையாது——மனிதர்கள் கடவுளைக் காப்பாற்றினார்கள். மக்கள் ஆலயங்களைக் கட்டினர். அவர்கள் குழந்தைகளையும், ஆடுகளையும், மங்கைகளையும் அவருக்காகப் பலி கொடுத்தனர். பலி பீடங்களைக் குருதியினால்நனைத்தனர். அவர்களுடைய வெள்ளி, பொன், நவ இரத்தினங்களையும் ஆண்டவனுக்காகக் கொடுத்தனர். அவர்கள் குருமார்களுக்கு ஆடையளித்தனர். ஆண்டவனோ அதற்குப் பதிலாக எதையும் திருப்பிக் கொடுத்தாரில்லை. நிழலிலே ஒளிந்துள்ள ஆண்டவன், அவர்களுடைய பிரார்த்தனைக்குப்பதில் கொடுத்தாரில்லை, அவர்களுடைய அழுகைக்குச் செவி மடுத்தாரில்லை, அவர்களுக்குக் கையெழுத்துக் கொடுத்தாரில்லை, அவர்களை அரவணைக்கக் கைநீட்டினாரில்லை, சொற்கள் எதையுமே அவர்கட்காக உச்சரித்ததில்லை. குருடும், செவிடுமாக அவர்களுடைய சிம்மாதனங்களில் அமர்ந்து பார்க்காது கேட்காது, மந்தமாக, ஆட்சி நடத்துகிறாராம். அவர்கள் நரம்புகளிலே ஆலயம் எழுந்த, அவர்கள்நரம்புகளிலேயே ஆராதனைகள் அய்க்கியமாகிவிட்டன.

கடவுளைத் திருப்திப்படுத்த மனிதன் என்னென்ன செய்தான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். மனிதன் தன் சிந்தனையை நீக்கிவிட்டான், மூளையின் ஒளியை அணைத்துவிட்டான்; ஆதாரமில்லாமலும் ஆதாரத்திற்கெதிராகவும் நம்பினான். அவன் தன்னைத் தானே தவறான வழிகளில் நடத்திக் கொண்டான். மக்கள் விரதமும், பட்டினியும் இருந்தார்கள். அவர்கள் உடலங்களைச் சிதைத்துக் கொண்டும், தசைகளைக் கீறிக் கொண்டும், குருதியைக்கிருமிகளுக்கும் கொடுத்தார்கள். தங்கள் துணைத் தோழர்களைத் தடுத்தும், சிறையிட்டும், சிதைத்துமிருக்கிறார்கள். மனைவி மக்களைத் துறந்தார்கள். தனியாகப் பாலைவனங்களிலே வதிந்தார்கள். மூடத்தனத்திலே நீந்தி மூடர்களை எரித்து, உருத்திராட்சம் எண்ணி, புனித நீரைத்தானே தெளித்துக் கொண்டு, கண்களைமூடி, கைகளைக்கட்டி முழந்தாளிலிருந்து, புழுதியில் புரண்டுமிருக்கிறார்கள்; ஆயினும் கடவுள் மவுனமாக-கல்லைப் போன்று அசைவற்று இருந்தார்.

இந்தக் குழைவும், நெளிவும், கொடுமையும், அநீதியும், பக்தியும், மடமையும் கடவுளைத் திருப்திப்படுத்தியதா?

நாமறியோம்!

எந்த ஒரு பக்தனுக்காகிலும் கடவுள் இரங்கினாரா? ஆசீர் கொடுத்துள்ளாரா?

யாமறியோம்!

இப்படிப்பட்ட கடவுளுக்கு நாம் நன்றி கூறலாமா?

ஆலய ஆண்டவனுக்கு நாம் நன்றி கூறலாமா?

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

குடி அரசு

23—4—49 சனிக்கிழமை.

பதினோறாவது தடவை?

நமது சென்னை சர்க்கார்—பார்ப்பனப் பனியாக்களின் ஆதிக்க சர்க்கார், நடத்திவரும் 'தடைப் படலத்தைப்' பார்க்கும் போது, குறிப்பாகப் பெரியார் அவர்களுடன் பிள்ளை விளையாட்டு விளையாடுவதில் பெருமையடைகிறதோ, என்றே நினைக்கவேண்டி இருக்கிறது.

நாட்டின் நலிவை எண்ணி, தமது தள்ளாத முதுமைப் பருவத்திலும் நாள் தவறாது, பட்டிதொட்டியெல்லாம் சுற்றிப் பிரசாரம் செய்து, மக்களின் மடமையையும் இழிவையும் போக்கப் பாடுபட்டுவரும் தந்தை பெரியாரவர்களை, இந்த மாதம் 16-தேதி உடுமலைப்பேட்டையிலுள்ள அதிகார வர்க்கம் 11-வது தடவையாக, இரவு ஏழரை மணிக்குக் கைது செய்ததையும், பின், அன்றிரவு நடுச் சாமத்திலேயே விடுதலை செய்ததையும் நினைக்கும் போது, இந்த எண்ணந்தானே வலுப்படமுடியும்?

தடையுத்தரவை மீறுவது என்கிற காரணமாகப், தமிழ் நாட்டில் பெரியாரவர்கள் 100க்கணக்கான தடவைகள் தடை உத்திரவு சார்வு செய்யப்பட்டிருந்தாலும், அதற்கு ஆக கைது செய்யப்பட்டிருப்பது இது 4-வது தடவையாகும். சமீபத்தில் குடந்தையில் நள்ளிரவில் கைது செய்யப்பட்டதும், மறுநாள் நள்ளிரவில் போலீஸ் லாரியில் ஏற்றி திருச்சி, தஞ்சை யெல்லாம் சுற்றியடித்து, தடியடியையும் எல்லை மீறிய கொடுமையையும் தொண்டர்களுக்குப் பரிசாகக் கொடுத்து, ஆதித்தன் தர்பார் நடந்து முடிந்ததை யாருக்கும் நினைப்பூட்ட வேண்டியதில்லை. இப்போது மறுபடியும் இரவின் தொடக்கத்தில் கைது செய்து, நடுச் சாமத்திலேயே விடுதலை செய்யப்பட்டிருக்கிறது, இந்த நள்ளிரவு நடவடிக்கைகளை, அதிகாரிகள் நடத்துவதற்குக் காரணம், "பகலில், மக்கள் கண்ணெதிரில் தங்கள் செய்கையைச் செய்ய வெட்கப்படுகிறார்களா? அல்லது பகல் நேரத்தில் கைது செய்வதால், மக்களின் கொதிப்புக்கு ஆளாக வேண்டிவரும் என்று அஞ்சுகிறார்களா? இவற்றில் எதுஉண்மையாக இருந்தாலும், அதிகாரிகளின் நடத்தைக்கு நாம் உண்மையாகவே பரிதாபப்படுகிறோம். ஆனால் பொறுப்பு வாய்ந்த ஒரு மக்கட் தலைவரை, ஏதோ ஒரு செக்ஷனைக் கூறிக் கைது செய்வதும், பின் சிறைக்குக் கொண்டு செல்வதும், உடனே விடுதலை செய்வதையும் கண்டால் நாட்டு மக்கள் இந்த நடத்தையை எவ்வளவு கேவலமாக எண்ணுவார்கள்?

பெரியாரவர்கள் குடந்தையில் கைது செய்யப்பட்டபோது, குடந்தைத் தலைவர்களான தோழர்கள் நீலமேகம், முத்துகனபால், பொன்னுசாமி, சாமி ஆகிய நால்வரையும் உடன் கைது செய்தனர். ஆனால் எவருமே அப்போது தடையை மீறவில்லை. தடையை மீறாத நிலையிலேயே அங்கு கைது செய்யப்பட்டனர். உடுமலையிலோ தடையை மீறியபின் கைது! இப்போது பெரியாரவர்களுடன், மத்திய திராவிட மாணர் கழகத் தலைவர் தோழர் மதியழகனும், உள்ளூர் கழகத்துணைத் தலைவர் தோழர் நாராயணனும், செயலாளர் தோழர் தங்கவேலும் ஆகிய மூவரும் உடன் சேரக் கைது!

உள்ளூர்த் தலைவர்கள் நால்வருக்கும் கொடுக்கப்பட்ட தடையுத்தரவு, உரிமையை ஒழித்துக் கட்டும் இழவோலை என்று மக்கள் கருதியதால், அந்தத் தடையை மீறுவதென்று நாள் குறித்து, அதை அறவழியில் அமைதியாகச் செலுத்த வேண்டும் என்பதில் கவனஞ்செலுத்தி, அதைப்பார்வையிடச் சென்றிருந்தபோது குடந்தையில் கைது! தடையுத்தரவுக்குக்காரணமோ, காங்கரஸ் தோழர்கள் கழகத்தை மோசமாகத் தாக்கிப் பேசியதும், உள்ளூர் மக்கள் சிலர் (கழகத் தோழர்களல்ல) அதைத் தாக்கிப் பேசியதும் ஆகுமென்று குடந்தை மாஜிஸ்திரேட் தோழர் ஜெயபாண்டியன் குறிப்பிட்டிருந்தார்!

உடுமலையில் தடையுத்தரவோ விசித்திரமானது. உடுமலைப்பேட்டை மாஜிஸ்திரேட் தோழர் அருள்ராஜ் அவர்களால் தடையுத்தரவுக்குக்காரணம் கூறப்பட்டிருப்பதைக் காணும்போது, வெளியூர்க் காங்கரஸ்காரர்கள்கூட கை கொட்டிச் சிரித்தால் அது ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் அந்தக் குற்றச்சாட்டு எவ்வளவு அபாண்டமானது? ஆதாரமின்றியல்லவா உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது? என்பதை அவர்கள் அறிவார்கள்.

"திரு. ஈ. வெ. ராமசாமி 16-4-49ல் உடுமலைப்பேட்டைக்கு வரப்போவதாகவும், அன்று பொதுக் கூட்டமோ ஊர்வலமோ நடத்த அனுமதிப்பது அவராலும், அவரைப் பின்பற்றுவோராலும், அநுதாபிகளாலும், அமைதியையோ சட்ட ஒழுங்கினையோ ஒட்டி நடந்து கொள்ளப்படும் என்று எவ்வித உத்தரவாதமும் கிடையாது" ஆகவே 144 என்கிறது தடையுத்திரவு.

பெரியாரவர்கள் பொது வாழ்வில் இறங்கியது இன்று நேற்றல்ல. அவர் பொதுப் பணியில் இறங்கிய காலத்திலிருந்து, பல்லாயிரக்கணக்கான பொதக்கூட்டங்களில், பல லட்சக்கணக்காக மக்கள் கூடியுள்ள இடங்களில் பேசியிருக்கிறார். எப்போதேனும் எந்த இடத்திலாவது பெரியாரவர்களுடைய பேச்சு கலவரத்தையுண்டாக்கியதாகவோ, பலாத்கார உணர்ச்சியைக்கிளப்பியதாகவோ எவராவது எடுத்துக் காட்டிவிட முடியுமா? பெரியாரவர்கள் கலந்துகொள்ளும் மாநாடுகளில் நடக்கும் ஊர்வலங்களில்கூட, "பார்ப்பனர் ஒழிக" என்று குரல் எழுப்பினால்கூட, கோபமாக, "ஊர்வலத்தில் கலந்து கொள்ள முடியாது", "இது போன்ற ஒழிகக் கூச்சல்உதவாது" என்று கண்டிப்பவர் என்பதைப்

போலீஸ் ரிப்போர்ட் கூறும். ஏமாற்றத்தில் அகப்பட்ட சிலர், தங்களை எதிரிகளாக எண்ணிக் கொண்டு, எத்தனை தொல்லைகளைக் கொடுத்தாலும்கூட, அவையெல்லாவற்றையும் தாங்கி நிற்கும் பொறுமையும், கடமையுணர்ச்சியும், கட்டுப்பாடுமுடைய ஒரு தலைவரின் வருகையால்—அவர் கலந்துகொள்ளும் கூட்டத்தால்—பேசும் பேச்சால் அசம்பாவிதம், நிகழ்ந்துவிடுமென்று அதிகாரிகளுக்கு ஏற்பட்ட அய்யத்திற்குக் காரணம் என்ன?

"இந்த நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட்டால் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டு,அடிதடியும் ரத்தக் களரியும் பெருகிவிடுமென்று தோன்றும்படி செய்யப்பட்டுள்ளது" என்று அந்தத் தடையுத்தரவு மேலும் விளக்குகிறது. அந்தத் தோற்றத்தைச் செய்ததெது? யார்? ஆதாரமென்ன? ரத்தக் களரி பெருகும் என்று பயப்பட வேண்டிய அளவுக்கு, யார்யாரைத் தாக்க அந்த ஆயுதம் சேகரித்து வைத்திருந்தனர்? அப்படியொரு தகவல் போலீசுக்குக் கிடைத்திருந்தால், அங்கு யார் யார் வீட்டைச்சோதனை செய்யப்பட்டது? அந்தச் சோதனையில் கிடைத்த தகவல் என்ன? அப்படியெல்லாம் ஒன்றுமில்லாமல், அபாண்டமாக ரத்தக் களரி உண்டாகிவிடும் என்று அனுமானிப்பது எப்படிப் பொருந்தும்?

இந்தத் தடையுத்திரவு எதனால் ஜனித்தது என்று நாம் அறிகின்றோமென்றால், உடுமலைப்பேட்டையிலுள்ள சிலர் (40) கையெழுத்துச் செய்து, போலீசுக்கு மனுக் கொடுத்தார்களாம். அந்த மனுவின் மீது தடையுத்திரவு என்பதை அறிந்தவுடன், அந்த ஊரிலேயே ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கையெழுத்துச் செய்து, அப்படி ஒரு அசம்பாவிதமும் நடந்துவிடாது; கூட்டம் நடத்த அனுமதி கொடுத்துவிட வேண்டும் என்று கோரினார்களாம். முந்திய சிலரின் வேண்டுகோளுக்கு இணங்கியும், பிந்திய ஆயிரத்தோரின் வேண்டுகோளை அலட்சியம் செய்துமே இந்தத் தடையுத்தரவாம். இது உண்மையாயிருக்குமானால், நீதியின் கழுத்து எவ்வளவு கொடுமையாக திருகப்பட்டிருக்கிறது என்று கேட்கிறோம்.

இந்தத் தடையுத்திரவு போடுவதற்கு அவசியம் எதுவாக இருந்தாலும், இந்தக் கூட்டத்தை நடத்த இருந்த முக்கியஸ்தர் யார்? அவர் அமைதிக்குப் பங்கமான, ஆட்சேபிக்கக்கூடிய செயல்களில் ஈடுபடுபவரா? மக்களின் பிரதிநிதி — நகரத்தின் தந்தை—(முனிசிபல் சேர்மன்) தோழர் கனகராஜன் எத்தகைய போக்குடையவர் என்பதை உள்ளூர் அதிகாரிகள் தெரிந்திருக்க வேண்டும். மேலும் இந்தத் தடையுத்தரவு போடப்பட்ட கூட்டம் எந்த நாளோ, அந்த நாளில்தான் உடுமலைப்பேட்டை நகரவாசிகள் நகரசபையின் பேரால், தடையுத்தரவால் தடுக்கப்பட்ட தலைவரை வரவேற்று, அவர் செயலைப் போற்ற, வரவேற்புக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஊர் மக்களோ வரவேற்று, உவகையுடன் அவர் வருகையைக் கொண்டாடும் காட்சி ஒரு பக்கம்! அந்த ஊர் மக்களுக்கு அபாயம் என்று காரணம் கூறி, பெரியார் பேச இருக்கும் மற்றொரு பொதுக்கூட்டத்திற்குத் தடை விதிக்கும் காட்சி மற்றொருபக்கம்! இந்த இரண்டையும் சேர்த்து எண்ணியிருக்கவேண்டாமா?

"ஒரு நகரத் தந்தைக்குத் தடையுத்தரவு போட்ட செயல், அந்த நகர மக்களையே அவமானம் செய்வதல்லவா? 'கட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்பது போலல்லவா இந்த அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கின்றனர்" என்று யாரேனும் எண்ணலாம். ஆனால் நாம் அதிகாரிகளைக் குற்றம் கூறவில்லை.

ஏனென்றால் கழகத்தினுடைய கொள்கை எதிர் வழக்காடுவதல்ல, எது உத்தரவோ அந்த உத்தரவுக்கு உடனே கட்டுப்படவேண்டியததான் என்பதை அதிகாரிகள் அறிவார்கள். மேலும் எவ்வளவு சேவலமாகக் கழகத்தாரை நடத்துகிறோமோ அந்த அளவுக்கு நமக்குப் பரிசு (உத்தியோகஉயர்வு) உண்டு என்கிற நம்பிக்கை, இன்றைய மந்திரிமார்களால் அவர்களுக்கு ஊட்டப்பட்டு வருகிறது என்பதை எண்ணினால், அதிகாரிகளின் இந்த நடத்தைகளுக்கு, அந்த அதிகாரிகளையே எப்படிக் குற்றம் சொல்லிவிட முடியும்?

மேலும், அன்று உடுமலைப் பேட்டையில், ஸ்தலஸ்தாபன மந்திரி பேசியிருக்கும் பேச்சைக் கவனித்தால், அதிகாரிகளை எப்படிக் குறைசொல்ல முடியும்?

காலையில் மந்திரிக்கு வரவேற்பு நகரசபையில். மாலையில் பெரியாருக்கு வரவேற்பு அதே நகர சபையில். அந்த வரவேற்புக்குப் பிறகு தான் பொதுக்கூட்டம். அந்தப் பொதுக் கூட்டத்திற்குத்தான் தடையுத்தரவு. இந்தத் தடையுத்தரவு வெளிப்படுத்தப்பட்ட பிறகு அன்று காலையில், காங்கரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசிய தோழர் சந்திரமௌலி அவர்கள், திராவிடக் கழக இயக்கத்தைக் கண்டித்துப்பேசியதுடன் நில்லாமல், "கிராமங்களிலும் நகரங்களிலும் அவ்வியக்கத்தைப் பரவவிடாமல் தடுக்கக் காங்கரஸ் ஊழியர்கள் பாடுபடவேண்டும்" என்றும் ஆலோசனை கூறியிருக்கிறார். இதற்கு உண்மையான அர்த்தமென்ன?

பெரியாரைக் கைது செய்த அன்று,பெருத்த போலீஸ் பந்தோபஸ்து ஏற்பாடாகியிருந்ததையும், காலையில் மந்திரியார் காங்கரஸ் தியாகிகளுக்கு செய்த உபதேசத்தையும் சேர்த்து எண்ணினால், பெருத்த போலீஸ் பந்தோபஸ்துக்கு என்ன அவசியம் என்பது நன்றாகத் தெரியும். சர்க்கார் செய்ய வேண்டிய வேலையை, மந்திரிமார்கள் தங்கள் கட்சியில் உள்ள கூலிக்காரர்களைக் கொண்டு நடத்தச் செய்தால், அதனால் ஏற்படும் பின் விளைவு எப்படி இருக்கும் என்பதை எண்ணித்தான், அந்த பந்தோபஸ்துக்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்தார்களோ, என்னவோ?

இனி என்ன?

பெரியாரவர்களுக்கும் மற்ற தோழர்களுக்கும் விரைவில் அழைப்பு வரலாம். உடனே, மனம் போலத் தண்டிக்கவும் படலாம்.

நமது கடமை என்ன?

சிறை செல்லும் தலைவர் நமக்கு விடுக்கும் கட்டளை எதுவோ, அதைப் பொறுமையோடு நிறைவேற்ற வேண்டியது தானே நமது கடமை. தயாராகக் காத்திருப்போம்.

அவமானப் பட்டயம்.

★

"ஹரிஜன்" என்ற சொல்லே விசித்திரமானது. அதற்குக் கூறப்படும் பொருளோ அறிவிற்குப் பொருந்தாதது. இத்தகைய சொல்தான் இந்த நாட்டில் ஒரு மக்கள் சமுதாயத்தைக் குறிக்கும் பெயராக ஆக்கப்பட்டுள்ளது. அரசியல் சூதாடிகளின் கையில் இது நல்லதொரு துருப்புச் சீட்டாகி விட்டது!

மானமற்ற முறையில் பெயர், பெருமை, பெயரும் பெருள் திரட்ட, இன இழிவை நினையாது தன்னை 'ஹரிஜன்' என்று சொல்ல—சொல்லுவதில் மகிழ—பெருமையாக பொது மேடைகளிலும்பேச-வெட்கமடையாத இலைத் துரோகிகளுக்கு, இப்பெயர் நல்லதோர் ஏணி—சாதனம்; ஆனால் அப்பெயர் பழங்குடி மக்களுக்கே ஒரு அடிமைச் சாசனம்—அவமானப் பட்டயம்!

'ஹரிஜன்' என்ற வார்த்தைக்குப் பொருள் கூறவந்த காந்தியடிகள் 'கடவுள் மகன் (The Son of Cod) என்று கூறியுள்ளார். 'இந்து' மத கோட்பாட்டிற்கிணங்க தெய்வீகத் தன்மையுடைய அதன் முப்பெரும் கடவுளருள் ஒருவராகிய 'ஹரி'க்கு முதன்மை இடம் கொடுத்து ஹரியின புத்திரர் என்ற பொருளில் பழங்குடி மக்களை 'ஹரிஜன்' என்று அழைத்து வந்தார். 'ஜவஜன்' என்றோ அல்லது 'பிர்மாஜன்' என்றோ அழைக்காது 'ஹரிஜன்' என்று அழைத்தமைக்குக் காரணமே அவருக்கு ஹரியிடம், அதாவது வைஷ்ணவபக்தி அதிகமாக இருந்ததேயாகும். அவர் பிறவியிலேயே வைஷ்ணவர்; அந்த நம்பிக்கையிலேயே வளர்க்கப்பட்டவர்; ஆரம்பக் கல்வி ஊட்டப்பட்டவர்; மேலும் அவர் 'வைஷ்ணவ ஜனதோ' என்ற பாட்டில் அதிகப்பிரியம் காட்டியது, 'ராம்துன்' பஜனை பாடியது, பகவத்கீதை பாராயணம் பண்ணியது—இன்ன பிற காரணங்களே நல்ல எடுத்துக் காட்டுகளாகும்.

இந்திய நாட்டில் வாழும் பழங்குடி மக்களுக்கு, மற்ற எந்த சமுதாயத்தினருக்கும் இல்லாத அளவில் பெயர்கள் அவ்வளவு மலிந்து கிடக்கின்றன. காந்தியடிகள் கடைசியாகச் சூட்டிய பெயர், அவர் விரும்பியபடி பழங்குடி மக்கள் வாழ்க்கைச் சூழ்நிலையில், எந்தவித சிறு மாறுதலையும் உண்டாக்கி விடவில்லை. இதனால் அவருக்கு எதிர்ப்பும், மறுப்பும் தான் கிளம்பின. பழங்குடி மக்களே அப்பெயரை வெறுத்தனர். மது, மண் கலயத்தில் இருந்தால் என்ன? அல்லது ஒளிக்கும் வெள்ளிக்கிண்ணத்தில் இருந்தால் என்ன? மது மதுவே தான். மது தன் இருப்பிடம் மாறும் போதும், அது தன் மகிமையை விட்டுக் கொடுப்பதில்லை. அல்லது விலைமாதாக வாழ்பவளுக்கு 'கண்ணகி' என்று பெயரிட்டால் அவள் கற்பிற்கு அணிகலன் என்று கருதப்படுவாளா? வேண்டுமானால் வெள்ளிக்கிண்ணமும் கண்ணகியும் ஏற்றத்தைக் குறிப்பிட அமையலாம்; ஆனால் அவைகள் ஏற்று நிற்கும் பொருள்களாம், மதி மயக்கும் மதுவும், கதி மாய்க்கும் காரிகையும்—சமுதாயம் புரையோடியுள்ளது என்பதற்கு அறிவிப்புக்கள் அல்லவா? இதுபோன்ற பெயர்கள் சீழ் கோத்த பெரும் புண்ணிற்குச் சிறிது நேரத்திற்கு தோல் மூடிபோல் அமையுமே தவிர, நிலைமை நீடித்தால் ஆபத்து. ஆக ரண சிகிட்சைதான் தேவை—அவசியம்.

பெயர் சூட்டுவதில் அர்த்தம் இருக்கிறது. புதுப் பெயர் சூட்டுவதிலும் அர்த்தம் இருக்கவேண்டும். இடம், பொருள், ஏவல் குறித்து அமைய வேண்டும். 'ஹரிஜன்' என்ற பெயர் பழங்குடி மக்களை குறிக்கும் வகையில் எப்படிப் பொருந்தும்? பொருந்தும் என்றாலும் அவர்கள் வாழ்வில் உயர வழிகாட்டியதா? உணர்ச்சி ஊட்டியதா? அல்லது அவர்கள் இழிவுத் தன்மை நீக்கப்பயன்பட்டதா? சண்டாளன், பஞ்சமன் என்ற பெயருருவில் நடமாடிய மக்கள் தான் இன்று 'ஹரிஜன்' என்ற பெயரில் நடமாடுகிறார்கள். அவர்களுக்குள்ள கேவலத்தன்மையல்லவோ மாற்றப்பட்டாகவேண்டும். இதை 'ஹரிஜன' என்ற பெயர் மாற்றவில்லை—மாற்றவும் முடியாது.

இதோடாவது இப்பெயர் ஒழிந்தபாடில்லை. இப்பெயர் பொருத்தமற்றது—தேவை இல்லாதது. பழங்குடி மக்கள் மானத்தையே வாங்குவது. இதை அரசியலார் அடிமைகளுக்கு பொன் விலங்காக்கிவிட்டார்கள். இதில் புதுமைகண்டு பூரிக்கிறார்கள் நம் இன சுயநலக்கோடரிக் காம்புகள் ஒருசிலர்!

சண்டாளர், தீண்டாதார், பஞ்சமர் என்ற சொற்கள், முதுகுடி மக்களைக் குறிக்கும் பெயர்களே. முப்புரி நூலாரின் வர்ணாஸ்ரமதர்மநூல், இழிமக்கள், 'ஐய்ந்தாம் ஜாதியார்' என்ற முறையில் வழங்கியபெயர்கள் இவை. உயிரினத்திலேயே கேவல, கீழ் நிலையில் வைக்கப்பட்டனர்.

முதுகுடியார், பழங்குடிகள் என்ற அவர்களைக் குறிக்கும் பெயர்களும், அவர்களது தோற்றம், வாழ்க்கை வரலாற்றுத் தொன்மை—நீண்ட ஆண்டுத் தொடர்பு—இவைகளைக் குறிக்க எழுந்தவை. அர்த்தமும் இருக்கிறது.

சமுதாயத்திலும், அரசியலிலும், பொருளியலிலும் அவர்கள் இருக்கும் நிலையை அனுசரித்து அழைக்கப்படும் 'தாழ்த்தப்பட்டவர்' 'ஒடுக்கப்பட்டவர்' என்ற பெயர்களும் பொருள் பொதிந்தவை.

வெள்ளையர் அரசாங்கம் பழங்குடி மக்களை ஷெடியூல்டு வகுப்பு என்று அழைத்தது. சர்க்காரிடமிருந்து, மற்றவர்களுக்கில்லாத ஒருசில தனிச் சலுகைகளைப் பெற தகுதியுடையவர்கள் என்பதற்காக ஒரு பாகுபாடு செய்யப்பட்ட மக்களாக்கியது. மக்களும் ஏற்றுக்கொண்டனர்.

காங்கரஸ் சர்க்காரோ, எந்தவித அர்த்தமோ, ஆலோசனையோ இல்லாமல் காந்தியடிகள் இட்டபெயர் என்ற ஒரு காரணத்திற்காக, அப்பெயரை பழங்குடி மக்களுக்கு வழங்கி பிரபலப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். 'ஹரிஜன்' என்ற பெயர்தான் இருக்கவேண்டும் என்று கட்டாயப் படுத்தும் அளவிற்கு வந்து விட்டார்கள். "ஹரிஜன் நாள்" என்று நாள் கொண்டாடி விழா எடுக்கவும் திட்டமிட்டு ஏற்பாடு செய்து விட்டார்கள்.

ஹரிஜன் என்ற பெயர்தான் இருக்க வேண்டும் என்று என்ன அவசியம் வந்துவிட்டது? அப்பெயருக்கு என்ன தான் யோக்கியதை இருக்கிறது? காந்தியடிகள் கூற்றுப்படி 'ஹரிஜன்' என்றால் ஹரியின் மக்கள் என்று பொருள். பழங்குடி மக்கள் மட்டும் தானா ஹரியின் மக்கள்? பழங்குடி மக்கள் தவிர்த்த மற்றவர்கள் பின் யாருடைய மக்கள்? இதில் பிரிவுத் தன்மை தோன்றவில்லையா? ஒற்றுமைக்கு, சமத்துவத்திற்கு, நேச வாழ்க்கைக்கு வழிகோலுவது என்றிருந்தால் இந்திய மக்கள் எல்லோரையுமே—என, இன்னும் பரந்த நோக்கமென்றால் உலகமக்கள் எல்லோரையுமே 'ஹரிஜனங்கள்' என்றல்லவோ விழித்திருக்கவேண்டும்? ஒரு குறிப்பிட்ட வகுப்பு மக்களுக்கு மட்டும் அப்பெயரை இட்டழைப்பானேன்? இதனாலேதான 'ஹரிஜன்' என்ற பெயரும் அவர்களுக்கு எற்கனவே உள்ள மற்ற பெயர்களின் தன்மையிலேயே நின்று, அவர்கள் ஜாதி, சமுதாய நிலையை, இழி பான்மையைக் காட்டும் கண்ணாடியாக அமைந்து விட்டது. இந்தச் சாதனையில் காந்தியடிகள் தோல்வியடைந்தவரே!

ஹரி என்ற அளித்தற் கடவுளாம் மகாவிஷ்ணுவும்—அவரது அவதாரங்

களான கிருஷ்ணன், பலராமன், ராமன் போன்றவர்களும், இந்துமத புராண இதிகாச நாடகங்களில் பிரதம நடிகர்கள்-ஒழுக்கங்கெட்டவர்கள்—மானஈனமற்ற மூடநகளைக்கையாண்டவர்கள். அத்தகையவர்களது சார்பைக் குறிக்கும் சொல்லையா, மானமே உயிரெனக்கொண்டு வாழும் மறக்குடி மக்களுக்குச்சாட்டுவது? இந்துமதக் குட்டைச் சேற்றிலிருந்து வெளிக்கிளம்பும் தன்மான இனத்திற்கு, சந்தனம் என்று சாக்கடைச் சேற்றை, ஏன் ஹரிஜன் என்ற சொல்லால் பூசுகிறார்கள் அரசியலார்? மூலாம் பூசும் வேலைக்கே இனி உலகில் இடம் இல்லை. நல்லது தீயது என்பதை அறிய உலகம் பகுத்தறிவுப் பாதையில் நடக்க ஆரம்பித்து விட்டது!

எஞ்சி நிற்கும் இரு பெயர்கள் விவாதத்திற்கு உரியன. பழங்குடி மக்கள் பழந்தமிழரா, அல்லது ஆதித் திராவிடரா என்பது. இரு பெயர்களும் ஒரு சமூக மக்களையே குறிப்பிடும் பெயர்கள்தான். ஒன்று மொழி பற்றியது, மற்றொன்று இனம் பற்றியது. ஆனால் இரண்டுமே அவர்கள் தொன்மையை—பழமையை— முதுமையைக் காட்டுகின்றன.

பழங்குடி மக்கள் இனத்தால் திராவிடர்—வரலாறு கூறுகிறது. அவர்கள் முதல் மக்கள் என்பதைத் தெளிவுபடுத்த 'ஆதி' என்ற சொல் முன்னால் சேர்க்கப்படுகிறது. அந்த ஆதி என்ற சொல் உரிமையையும் வலியுறுத்துகிறது.

பழந்தமிழர் என்கிறபோது, தமிழ் மொழி பேசுதலை அடிப்படையாகக் கொண்டதாக ஆகிறது. இங்கு 'பழம்' என்ற சொல் 'ஆதி' என்ற பொருளிலேயே அமைந்து, தொன்மையையும் உரிமையையும் உணர்த்துகிறது. கன்னடம், மலையாளம், தெலுங்கு—இம் மொழிகளைப்போல் தமிழும் திராவிட இன மொழியாகையால், தமிழனும் திராவிடரே. ஆக பழந்தமிழரும் ஆதி திராவிடரே! பழந்தமிழர் ஆதிதிராவிடரில் அடக்கம். இனத்திற்கே முதல் இடம். கல்விக்காக மக்கள் இல்லை; ஆனால் மக்களுக்காகத்தான் கல்வி. அதுபோலவே மொழிக்காக இனமில்லை; இனத்திற்காகவே மொழி.

எனவே பழங்குடி மக்கள் ஆதிதிராவிடர்களேதான்! ஆதிதிராவிடர் என்ற பெயரே வரலாறுகண்டது, பொருள் உள்ளது, அறிவிற்கு ஏற்றது, மடமை இல்லாதது, மக்கள் விரும்புவது.

ஆதிதிராவிட மக்கள் விரும்பாத, நூதனமான 'ஹரிஜன்' என்ற பெயரை ஏன் அவர்களுக்குச் சுமத்தவேண்டும் என்பதுதான் விந்தை. இல்லை, அரசியல் தந்திர அரங்கில் இது ஒரு அங்கம்! அரசியலில் அறிவிலிகளாக, சமுதாயத்தில் தாசர்களாக, பொருளாதாரத்தில் நித்திய தரித்திரர்களாக ஆக்கப்பட்டுள்ள ஒருமக்கள் இனத்தை, தங்கள் சுயநல கட்சிவேட்டைக்காக ஆட்டிப்படைக்க எதுவும், எப்படியும் செய்யலாம் என்று எண்ணுகிறார்கள் போலும் அரசியலார். இதற்கு நம் இன புல்லுருவிகள் சிலர் ஆட்சியாளர்களுக்கு துணை போகிறார்கள்!

விழிப்புற்றுள்ள ஆதி திராவிட மக்கள் திரண்டெழவேண்டும், வேதனை தரும் இப்பெயர் நமக்குக் கூடாதென்று கிளர்ச்சி செய்யவேண்டும். நம் வெறுப்பை ஆட்சியாளர் உணரும் வகை செய்யவேண்டும். ஆதி திராவிடர்களின் தலைவர்கள் செய்ய வேண்டிய முதல் பணி இது! செய்வார்களா? ஹரிஜன் என்ற பெயர் நமக்குக் கூடாது. அது நமக்கோர் அவமானப் பட்டயம்.

''மநுதன்''

ஒத்திவைப்பு.

இந்த மாதம் 25-ந் தேதி நடக்க இருந்த திராவிடமாணவர் பிரசாரப் பயிற்சி வகுப்பு, காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

காரணம், திடீரென்று பெரியாரவர்கள் உடுமலைப்பேட்டையில் கைதாக்கப்பட்டு, சொந்தப் பொறுப்பில் விடுதலை செய்யப் பட்டிருந்த போதிலும் சீக்கிரம் வழக்குத் தொடரப்பட்டு அவர் தண்டனைக்குள்ளாகலாம். அந்தப்படி ஏற்பட்டால் பிரசாரப் பயிற்சி சற்று வசதிக் குறைவான நிலையிலும் தக்க பயனளிக்காததுமாக ஆகிவிடுமோ என அய்யப்படுகிறேன். நிலைமை தெளிவானதும் தேதி குறிப்பிட்டு அறிக்கை வெளிவரும்.

செயலாளர்
தி. மா. பி. ப. கமிட்டி, ஈரோடு.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுள் யார்? என்ன அவன்?

அவர்கள் கூறுகிறார்கள் ஆண்டவன் எல்லாவற்றையும், இருந்ததையும், இருப்பதையும், இருக்கப் போவதையும் படைத்துக் காப்பாற்றுகிறவராம்; அவர் கந்தர்வர்கட்கும், பிசாசுகட்கும் தந்தையாம்; மோட்ச, நரகத்துச் சிற்பமாம்; அவர் உலகத்தைப் படைத்து ஒரு ஆணையும், பெண்ணையும் விட்டு, ஒரு பாம்பைப் படைத்து அவர்களை உணர்ச்சிக்குள்ளாக்கி; எதிரிகளை உண்டாக்கி அவர்கட்கு வெற்றியைக் கொடுத்து, தன் செய்கைக்குத் தானே வருந்தி; பெரும் வெள்ளத்தை அனுப்பி எல்லோரையும்—எட்டுப்பேர் நீங்கலாக அழித்தாராம். பின் தன் விருப்பத்திற்குப் பாத்திரமானவர்களையும், அவர்களுடைய குழந்தைகளையும் நாகரீகப்படுத்த முயன்று, அதைப் பூகம்பத்தமூலமும், நச்சுப் பாம்புகள் மூலமும், பஞ்சம், பட்டினி இவைகள் மூலமும் செய்தாராம்; ஆனால்முடிவில்தோற்றுப்போனார். அவர் தோற்றுப் போகவே விரும்பினாராம். பிறகு உலகிலே பிறந்து, மூன்றாண்டுகள் போதித்து, ஒரு சில காட்டுமிராண்டிகளைக் கொண்டு கொல்லச் செய்துகொண்டாராம் தன்னை. பின் பிணத்தினின்றும் உயிர் பெற்றெழுந்து மோட்சத்திற்குத் திரும்பப் போய்விட்டாராம். (வரும்)

குறள் நாள்.

பெரியகுளம் ஏப். 16.

காலை 10-மணிக்கு ராமவிலாஸ் தியேட்டரில் திராவிட மாணவர் கழகத்தினரால் 'குறள் நாள்' விழாக் கொண்டாடப்பட்டது. மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர் ச. ப. கன்னையா தலைமை வகித்தார். ஷை கல்லூரி மாணவர் வள்ளுவதாசன், விருதை ''தனி அரசு'' ஆசிரியர் எ. வி. பி. ஆசைத்தம்பி முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். செயலாளர் நடராஜன் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

மாலை 4-மணிக்கு மீனாட்சி அம்மன் படித்துறையில் நகர திராவிடர் கழக சார்பில் குறள் நாள் கொண்டாடப்பட்டது. ச. திருவேங்கடம் தலைமை தாங்கினார். புலவர் புனுகு நடராஜனும், கன்னையாவும் இயக்கப் பாடல்கள் பாடினார்கள். திருச்சி தி. கோ. சீனிவாசன், சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் க. அன்பழகன் எம். ஏ. முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். ப. கு. ராமசாமி நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

* *

பூட்டுத்தாக்கு ஏப். 12.

பகுத்தறிவுப் படிப்பகத்தாரால் தோழர் மருத்துவனார் மணி தலைமையில் ''குறள் நாள்'' கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சுதன், சாமிநாதன், கிருட்டிணன் ஆகியோர் ''வள்ளுவரும் குறளும்'' என்பதுபற்றிப் பேசினார்கள்.

[6ம் பக்கத் தொடர்ச்சி]

பிணைத்து, அவன் அருள்வேண்டி தலைமையுரையை முடித்துள்ளார்.

சர்வம் பார்ப்பனியப் புகழ் மயம்

புத்தகக் கண் காட்சியைத் திறந்து வைத்த மராமத்து மந்திரி, சாமிநாதய்யர் புகழ் பாடிவிட்டு, இடைக் காலத்தில்—ஆரிய ஆட்சியில் முளைத்த ஏட்டுப் பிரதிகளை அச்சிட முயற்சிக்க வேண்டுமென்று யோசனை கூறியுள்ளார்.

சர்க்கார் கூலிபெறும் தமிழ்க் கவிஞருக்கு (ஆஸ்தானக் கவிக்கு) வரவேற்பு அளித்துள்ளனர் தமிழ்த் திருநாள் கூட்டத்தினர்.

விஞ்ஞானப் பகுதிக்குத் தலைமைவகித்த பார்ப்பனர் டாக்டர் கிருஷ்ணன், இந்திய நாட்டார் ஏனைய நாட்டவருக்கு எந்தத் துறையிலும் இளைத்தவரல்ல என்று எடுத்துக்காட்ட, கணிதத்தில் பார்ப்பன ராமானுஜத்தை எடுத்துக்காட்டாகக் காட்டிப்பேசியுள்ளார்.

விஞ்ஞானப் பகுதியை ஆரம்பித்துவைத்த டாக்டர் ராஜன், சிரிப்புக்கிடமாக தான் கலந்து கொண்டதற்குக் காரணம் கூறி, சி. வி. ராமன் டாக்டர் கிருஷ்ணன் ஆகிய சகபாடிகளின் புகழ்பாடி, விஞ்ஞான நூல்களைத் தமிழில மொழிபெயர்க்க வேண்டுமென்றும், அதனில் சர்வதேச ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்ட கலைச் சொற்களை உபயோகப்படுத்த வேண்டும்'' என்றும் பேசியுள்ளார்.

பொருளாதாரப் பகுதிக்கு தலைமைதாங்கிய அறிஞர் ஆர். கே. சண்முகம் செட்டியார், நமக்குத் தேவையான உணவுப்பொருள்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்யவேண்டுமென்றும், வெளி நாட்டிலிருந்து அதிகச் செலவில் இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்தவேண்டுமென்றும் கூறியுள்ளார். பொருளாதார முன்னேற்ற வழியாக, சர்க்காரின் சம்பளமில்லாப்பிரசாரகராக, சர்க்கார்சேமிப்பு திட்டங்களை மக்கள் ஆதரிக்க வேண்டியுள்ளார். (இன்னும் இது போன்ற பேச்சு எப்பதவிக்காகவோ)

பொருளாதாரப் பகுதியைத் துவக்கி வைத்த சி. ஆர். சீனிவாசன் (பார்ப்பனர்) காந்தியார் மரணகீதம்பாடி, ''இன்று நாட்டை நிர்வகிப்பவர்களுக்கு நிர்வாக அனுபவம் காணாது; அதிகாரம் கைக்கெட்டியதும் அவர்கள், குறைகளை நிவர்த்திக்க துடிக்கிறார்கள் என்றாலும், லக்ஷிய சித்தியில் அனுபவசாத்தியத்தை மறந்துவிடுகிறார்கள்'' என மறைமுகமாக பச்சையான வார்த்தையால், திராவிட மந்திரிசபை மீது பாய்ந்துள்ளார்.

சென்னை சர்க்கார் பொருளாதார ஆலோசகர் டாக்டர் நடராஜன், உணவுஉற்பத்திக்கும், பொருளாதார நிலை உயர்வுக்கும் சென்னை சர்க்காரின் ரூ. 500 கோடி திட்டத்தை விளக்கியுள்ளார்.

இலக்கியப் பகுதிக்கு தலைமை வகித்த கம்பராமாயண ரிப்பேர்காரர் டி. கே. சிதம்பரநாத (முதலியா)ர் குறளிலிருந்தும், பாரதியிலிருந்தும் சிலவற்றைப் பாடி, தமிழ் மொழியில் இருப்பதுபோல் வேறு மொழியில் மோனை, ஓசை முதலியவை இல்லை எனக் கூறியுள்ளார். லீலாவதி ராமசுப்பிரமணியம் ''கம்பராமாயணம்'' என்பது பற்றியும், அறிஞர் ஆர். பி. சேது (பிள்ளை) 'சொல் ஆராய்ச்சி' களும் பொருள் பற்றியும், பழனியப்பன் (பிள்ளை) ''திருவள்ளுவரும் தமிழும்'' என்பது பற்றியும், கே. பாலசுப்பிரமணிய(அய்யர்) 'சமய நூல்கள்'' என்பது பற்றியும், ''திருவள்ளுவரும் அரசியலும்'' என்பது பற்றி விருத்தாசலம் ஹாஜி அப்துல் காதர் ஜமாலி சாகிப்பும், ''சிலப்பதிகாரம்'' என்பது பற்றி டாக்டர் மு. வரதராஜனும் பேசியுள்ளனர். பின் 'கல்கி' ஆசிரியரும் மற்றும் சிலரும் பேசினராம். இவற்றின் விளக்கமோ—பேசியதன் சுருக்கமோ எந்தப் பத்திரிகையிலும் இல்லை. ஒரு வேளை பார்ப்பனீயத்திற்கு அவை விரோதமாய் இருந்தனவோ என்னவோ?

பின், அவினாசிலிங்கனார் (செட்டியார்) அவர்களால் பல துறைகளில், சிறந்த புத்தகங்கள் எழுதியவர்கள் எனக் கருதப்பட்டவர்களுக்கு, தலைக்கு ரூ. 500 பரிசளிக்கப்பட்டதாம். பரிசு வழங்கப்பட்ட எழுவரில் மூவர் பார்ப்பனர். இது பார்ப்பனரைத் தமிழ் வளர்ப்பவர்கள் எனப் பொய்யாக மக்களுக்கு எடுத்துக் காட்டும் காட்சியன்றி வேறென்ன? தமிழ் வளர்ச்சியாம்-கலப்பு மிகமிக அவசியம் என்று காட்ட, அதற்கு எடுத்துக் காட்டாகப் பார்ப்பனர்களுக்குப் பரிசாம்!

டி. கே. எஸ். சகோதரர்களின் ''ஔவையார்'' நாடகத்துடன் இந்தத் திருநாள் முடிவடைந்துள்ளது. அவர்களுக்கு ஓமந்தூர் ராமசாமியால் விழாக் கமிட்டியின் சார்பாகவெள்ளிக் கோப்பை கொடுக்கப்பட்டிருக்கிறது. காரணமில்லாமலா வெள்ளிக் கோப்பையைத் தந்திருப்பார்கள்?

இப்பெரிய தமிழ்த்திருநாளுக்கு ஆசிச் செய்தி அனுப்பிய, பெரிய மனிதர்களான இருவர் பெயர் தான் பத்திரிகைகளில் வந்துள்ளது. இந்திய மந்திரி என். கோபால்சாமி (அய்யங்கார்)யும், மாஜி மந்திரி சுப்பராயனுமாம் அவர்கள்.

என்ன தெரிகிறது?

இத்திருநாட்களின் வைபவத்தையும், வந்திருந்தவர்களின் பட்டியலையும், வாழ்த்தனுப்பிய பெரியார்களின் பெயர்களையும் கூறியவுடன், தமிழ்மொழி அறிஞர்கள்-தமிழர்கள்கூடிய, எத்தனை பெரிய தமிழ் வளர்ச்சி நாள் கொண்டாட்டம் என்பது உங்களுக்குப் புரியாமலா இருக்கும்? சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் அரசியல் சூதாட்டக்காரர்கள் கூட்டமென இதைக் குறிப்பிடலாம். இக்கூட்டம் மறைமுகமாக மக்களுக்கு, ''நாங்களும் தமிழ்த் தொண்டு செய்கிறோம்'' ''திராவிடர் கழகத்தாரை நம்பாதீர்கள்'' என மொழியின் பெயரால் மக்களை ஏமாற்றி, மூடநம்பிக்கை, வர்ணாச்சிரம வளர்ச்சி, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற நிலைமைகளை நீடிக்கச் செய்ய, ஆரியர்களாலும், அவர் தாசர்களாலும் நடத்தப்படும் ஏமாற்றுத் திருநாள் என நாம் எச்சரிக்க வேண்டிய நிலையில், இன்றைய மக்கள் விழிப்படையாமலில்லையாகையால், மேலும் விவரித்துக்கூற வில்லை.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

பயமேது? அது கிடக்கட்டும்; என் கதையை இன்னும் கேள்! எனது செயல்களையெல்லாம் கேள்விப்பட்ட என் மாமன் கம்சன் என் மீது கோபித்தார். அது தெரிந்ததும் அங்கு சென்று தந்திரமாய் அவரையும் கொன்றொழித்தேன். ருக்மிணியைத் தேரில் தூக்கிக் கொண்டு ஓடிவந்து மணம்புரிந்து கொண்டேன். ஜாம்புவான் கரடி தன் மகள் பாமாவையும் என் கழுத்தில் கட்டிவிட்டது. இந்தப் பாமா யார் தெரியுமா?

"முன்பு நீ பன்றி உருவத்திலிருந்தபோது உன்னைக் காதலித்து, நரகாசுரனைப் பெற்றெடுத்த பூமிதேவி தானே! பிறகு பெற்ற மகனையே கொன்று தீபாவளிக் கொண்டாட்டத்தை உண்டாக்கியவள் இந்தப் புண்ணியவதியல்லவா?"

"அவளேதான். பாமாவையும் ருக்மிணியையும் ஒரு வீட்டில் வைத்துக்கொண்டு நான் பட்டபாடு, அடடா! நடு நடுவே நாரதன் வேறு வந்து ஏதாவது கலகம் செய்து கொண்டேயிருந்தான். இரண்டு பெண்டாட்டிகளுக்கிடையே சிக்கி நான் பட்ட தொல்லை, அப்பாடா!"

"உங்கள் பரம்பரைக்கே இரண்டு தாரம் மணம் புரிவது வழக்கமாகி விட்டதோ! ஏன் வீணாக அவஸ்தை? அந்தரங்க பக்தர் யாருக்காவது ஒன்றைத்தானம் செய்து விடுவது தானே."

"அதையேன் கேட்கிறாய், கடைசியில் அந்த நிலைமையும் வந்தே விட்டது! பில்வமங்கள் என்றொரு பக்தன ராதையைக் கையைப் பிடித்து இழுத்து விட்டான். அவள் என்னிடம் முறையிட்டாள். பக்தர் விரும்பினால் தடை சொல்லலாகாது என்று அவளை அநுமதித்தேன்......இப்படியேயிருந்து கடைசிக்காலத்தில் இதுவே எனக்கு வேலையாகவும் வந்து சேர்ந்தது!"

"என்ன, கூட்டிவைக்கும் 'மாமா' வேலையா? அது நியாயந்தானே! எங்கள் நாட்டில் பணத்திமிரில் தாசி வீடுசெல்லும் 'மைனர்' பல பேர் இப்படித்தான், சொத்தெல்லாம் தொலைந்ததும் கடைசியில் அதே தாசிக்கு ஆள் பிடிக்கும் 'மாமா' வாகி விடுவது வழக்கம்..."

"அப்படித்தான் என்னை ஆக்கி விட்டான் அர்ச்சுனன். இவனுக்காகப் போடாத வேஷம் போட்டு, ஆடாத ஆட்டம் ஆடி எத்தனை பேரை இவனுடன் இணைத்து வைத்தேன் தெரியுமா? அல்லி, பவளக்கொடி....கடைசியில் எங்கள் குடும்பத்திலேயே கையை வைத்து விட்டான்! என் தங்கை சுபத்ராவை இவனுக்குப் பணிவிடை செய்ய அனுப்பினேன் இவன் கபட சந்நியாசியாக இருந்தபோது..."

"அதாவது தீர்த்த யாத்திரை செய்து கொண்டிருந்தபோது; தருமரும் திரௌபதியும் 'அப்படி'யிருந்ததைப் பார்த்துவிட்ட தோஷ நிவர்த்திக்காக...அது சரி. அய்ந்து கணவன்மாருக்கு ஒருத்தியை மனைவியாக்கி, அவளை அழியாத பத்தினியாகவும் ஆக்கி, எங்கள் நாட்டில் பத்தினி கண்ணகிக்குச் சிலை யெடுத்துப் போற்றி வந்ததை மாற்றிப், பட்டி தொட்டிகளிலெல்லாம் திரௌபதியம்மன் கோவிலும், தீமிதி விழாவும் செய்து மக்களுக்கு மானவுணர்ச்சியே யில்லாமல் செய்தாயே. பாதகா!"

"பதறாதே. தம்பி! நான்தான் செய்தேன்; அதை இன்னமும் நம்புகிறார்களே, முட்டாள்கள், அதைக்கேளேன் ஏனென்று! திரௌபதி அய்வருடனும் திருப்தியடையாமல் ஆறாவதாகக் கர்ணன்மீதும் ஆசைப்பட்டவள். இந்தக் கர்ணன் குந்திதேவிக்குக் கல்யாணமாகுமுன் சூரியன் மூலமாகத் திருட்டுத்தனமான சேர்க்கையினால் பிறந்தவன். இவன் துரியோதனன் மனைவியுடன் கள்ள நட்புக்கொண்டவன். 'எடுக்கவோ, கோக்கவோ' சமாச்சாரந்தான் உனக்குத் தெரியுமே!

"இந்தப்பத்தினி பாஞ்சாலியின் கற்பைக்காப்பாற்றத்தான், உரிய உரியச் சேலையைக் கொடுத்துக் கொண்டிருந்தாயாம். இன்று எங்கள் நாட்டில் எத்தனையோ ஏழையர் 'கையது கொண்டு மெய்யது பொத்தி' வாடுகிறார்களே, இன்று ஏன் நீ உதவக் கூடாது? ஆபாசக்களஞ்சியங்களான பஞ்சபாண்டவர்களுக்குப்பரிந்து, குடும்பக்கலகத்தைப்பெரிதாக்கிப் பலவிதத் துரோகங்களும் வஞ்சகங்களும், சதியாலோசனைகளும், மித்ரபேதங்களும் செய்து பாரதப்போர் நடத்தினாய். நீ காட்டிய வழியில் தான் இன்று இந்நாட்டு ஆரியரும் நடப்பதால், திராவிட இனத்தவருக்கு இனவுணர்ச்சியின்றி, ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு மாண்டு மடிந்து வருகின்றனர். நீ அர்ச்சுனனுக்கு உபதேசித்த வஞ்சகத் தந்திர வழியான கீதையை வாழ்வின் வழி காட்டியென்றும், குறள் கூட இதன்வழி நூலென்றும், மானம்-மதிகெட்ட மக்கள் பேசியும் எழுதியும் வருகின்றனர். 'நால்வகைச்சாதியை இந்நாட்டில் நானே நாட்டினேன்' என்று எவ்வளவு தைரியமாய் நீசொல்லியிருக்கிறாய் கீதையில். முதலில் உன்னை இந்நாட்டைவிட்டே ஓட்டுவோம், தெரியுமா! மாயக்கண்ணா! உன்னைமாய்க்காமல் ஓயமாட்டோம்!! போய்விடு...

மாயக்கண்ணன் மறைந்து விட்டான். மங்கிய மாலை நேரம். மந்தமாருதம் வந்து மனதைக் கொஞ்சம் குளிரவைத்தது. கண்களை நன்றாகத் துடைத்துக்கொண்டு, 'அப்பாடா' என்று சோம்பல் முறித்து, எழுந்தேன்.

["பெருச்சாளி"]

(3ம் பக்கத்தொடர்ச்சி)

பெருந்திணை.

இனிக் கைக்கிளை போலப் பெருந்திணையும் விலக்கத்தக்கதே யாகும். (1) தலைமகள் மனத்தில் இசைந்தும், நாணத்தால் வெளிக்கு இச்சையாள்போல் காட்டினும், தோழி மறுக்கினும், சுற்றத்தார் மணஞ்செய்து கொடுக்க மறுக்கினும் தலைவன், 'நான் மடலேறுவேன்' எனக் கூறுதலே யன்றி மடலேறுதலும், (2) மூத்தாளை விரும்புதலும், இருவரும் பருவ முதிர்ந்தபின் புணர நினைப்பதும், (3) பிரிந்து சென்ற தலைவன் வர நாளானால் காம மிகுதியால் தலைவி மனமுடைந்து வருந்துதலும், (4) மனைவி விரும்பாமலும் கணவன் புணர்ச்சியை விரும்பலும், வலுக்கட்டாயமாகப் புணர எண்ணுதலும் ஆகிய இந்நான்கு செயலும் பொருந்தாக் காமமாகும்.

1. நாணத்தால் உடன்படாதவளை வற்புறுத்தினால் மறுத்து விடுவாள். மடலேறுதல்காதலைன்புக்குப் புறம்பானசெயலாகும் (2) மூத்தாள் இளையோனை விரும்பாள். பருவமுதிர்ந்தபின் இருவர்க்கும் ஒரே தன்மையான புணர்ச்சிவேட்கைதோன்றாது. (3) பிரிந்து சென்ற கணவன் வாராமையால் வருந்துதல் மனச்சோர்வையும், உடல் நலிவையும் உண்டாக்குதலோடு தற்கொலைக்கும் ஏதுவாகும். மீறிய காமம் ஒழுக்கக் கேட்டையும் தரும். (4) மனைவிக்கு விருப்பமின்றிக் கணவன் புணரநினைப்பதும், வலிதில் புணர முயற்சிப்பதும் மனைவியின் அன்பைக் கெடுத்து, வெறுப்பையுண்டாக்கி, இல்லற நிகழ்ச்சிக்கு இடையூறுண்டாக்கும். ஆகவே இவை நான்கும் இன்பவாழ்வுக்கு ஒத்ததல்லவென்று நம் முன்னையோர் விலக்கிவந்தனர்.

மடலேறுதல் என்பது, பெற்றோர் தலைவியின் களவொழுக்கத்தைக் கருதாமலும், தலைவி தன் கருத்தைத் தோழி மூலம் பெற்றோர்க்கு உரையாமலும்

தாழ்த்துவரினும், காவல் மிகுதியால் தலைவியை அடிக்கடி எதிர்ப்பட்டுக்கூட முடியாவிடினும், தலைவன் தலைவியின் களவொழுக்கத்தைப் பலர்க்கும் அறிவிப்பதற்காகத், தலைவியின் உருவத்தைப் பனையோலையில் எழுதிக் குதிரைமேல் ஏறிக்கொண்டு தலைவியூர்த் தெருவில் செல்வான். அது கண்ட ஊரார் கூடிப்பேசுவர். அவ்வூரார் பேச்சாகிய அலருக்கஞ்சிய பெற்றோர் அவனுக்கே தம்மகளை மணமுடிப்பர். இது மடல்மா எனவும் வழங்கும். மடல்மா—மடல் தாங்கிச் செல்லும் குதிரை. மடல்—பனையோலை. இது மிகமிகச் சிலரிடம் நிகழும் தீய ஒழுக்கமேயாகும்.

ஒத்த காமத்திற்குப் புறம்பான இக்கைக்கிளை, பெருந்திணை என்னும் ஒவ்வாக்காமமும் அன்று அங்குமிங்கும் சிலரிடம் நடந்திருக்குமாகையால், அவற்றை எடுத்துக்கூறி விலக்கினாரென்க.

அய்ந்திணை.

அய்வகையான ஒழுக்கம். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும். இவ்வைந்துமே மக்கள் கடைப்பிடித்து ஒழுகத்தக்க ஒழுக்கமாகும். இன்பவொழுக்கமாகிய குறிஞ்சி முதலிய அய்ந்திணையும் இனிது நடத்தற்கு, இடமும், காலமும் ஆகிய முதற்பொருளும், தெய்வம் முதலிய கருப்பொருளும், புணர்தல் முதலிய உரிப்பொருளும் வகுத்து வைத்தனர் நம் முன்னையோர்.

மதவெறியை மூட்டும் மொட்டைகள்!

பூட்டுத்தாக்கு எப். 12.

கழக அனுதாபியும் தேனீர்க்கடைத் தோழருமான தோழர் முனிரத்தினம் அவர்கள், ஜாதிபேதத்தைப் பாராது அனைவரையும் ஒருங்கே—சமத்துவமாக—கவனிப்பதால்; ஆதித் திராவிடத் தோழர்களுக்கும் தேனீர் அதே பாத்திரத்தில் கொடுப்பதால், ஜாதித் திமிரைக் காட்டி 'மொட்டை' மந்திரி என்பவர், ஊரில் விஷமப் பேச்சுகள் பேசி, ஜாதித் திமிர் கொண்டவர்களைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, கடைக்குப் போகிறவர்களை தடுத்துப் பார்க்கிறார். மதம் மடிந்துவரும் இன்றைய நிலையில் பாச்சாப் பலிக்காது மண்ணைக் கவ்வியது.

வெள்ளிக் கோப்பையில் விஷம்!

★

நீல வானத்தில் படர்ந்திருந்த கருமேகக் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு பூர்ணச் சந்திரன் ஒளிக் கதிர்களை உவகையுடன் வீசிக்கொண்டிருக்கிறான். மலர்ந்திருந்த மல்லிகையின் மணம் கலந்த தென்றல், அந்தப் பளிங்கு மேடையை நோக்கி வீசிக்கொண்டிருந்தது. மேடையின்மேல் ஒரு அழகிய யுவதியும், ஒரு இளைஞனும் உட்கார்ந்திருந்தனர். அவர்களின் அருகில் இருந்த வெள்ளிக் கோப்பையை அவள் அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் வஞ்சனையின் சாயல் படிந்திருந்தது. அந்த இளைஞனோ; ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடந்தான். அந்த இடத்தில் சலனமற்ற அமைதி குடிகொண்டிருந்தது.

விஷம் கலந்த கனிச் சாற்றைவெள்ளிக் கோப்பையிலிட்டுக் கொடுத்து, அவனைக் கொலை செய்ய முயற்சிக்கிறாள் அந்த வஞ்சகி.

அழகிய அந்த வெள்ளிக் கோப்பையைக் கையிலெடுத்தபொழுது, அதில் விஷம் இருக்கும்என்று அவன் நினைக்கவில்லை. அருந்த எத்தனிக்கையில் அதிலிருந்து கிளம்பிய வாடையினால் சந்தேகமுற்று, அருந்தாமல் கீழே வைத்துவிடுகிறான் அந்த இளைஞன். அந்த வஞ்சகியோ வாஞ்சை உள்ளவள்போல் நடித்து, மயக்கு மொழி கூறி, அவனைமரணத்தில் மூழ்கடிக்க முயற்சிக்கிறாள். அவனோ எதுவும் பேசாமல் சிந்தனையிலேயே இருக்கிறான். முடிவு என்னவாகுமோ?

*   *

மேலே கண்ட காட்சி கற்பனைதான். ஆயினும்; அரசியல் மேடையில், மேலேஉள்ளது போன்ற நிகழ்ச்சிகள் இன்றும்நடைபெற ஆரம்பித்திருக்கின்றன. துரோக எண்ணம் கொண்ட ஆரியக் கூட்டம், தமிழரின் வாழ்வில் விஷத்தைக் கலக்க, பல வழிகளிலும் முயற்சித்துக்கொண்டிருக்கிறது. விஷமிட்டு வாழ்வைக் கருகச் செய்ய, வேதியக் கூட்டம் முனைந்திருப்பது புதிதல்ல. சரித்திரத்தில் சோகக் கறைபடிந்த ஒவ்வொரு ஏடுகளும் இதைத்தான் கூறும். இந்தச் சூது மதியினர் வெள்ளிக் கோப்பையில் விஷமிட்டுக் கொடுக்க முயற்சிப்பதை உணர்ந்துகொண்ட ஓமந்தூராரை ஒழித்துவிட்டு, சுப்பராயன் போன்ற இனத் துரோகிகளை ஆட்சிபீடத்திலேற்றி, நம்மவரை ஒழிக்க ஆரியம் திட்டமிட்டிருந்தது. நல்லவேளையாக அந்தத் திட்டத்தில் மண்ணைத் தூவிவிட்டு குமாரசாமி ராஜாவும், அவரது கூட்டாளிகளில் சிலரும் ஆட்சிபீடத்திலேறியிருக்கிறார்கள். வருங்காலத்தில் இவர்கள் ஆரியத்தின் அணைப்பில் அகப்பட்டுத் தமிழரின் வாழ்வை அழிக்க முற்படுவார்களா? அல்லது தாங்கள் ஆட்சி பீடத்தை விட்டு அகல நேரிட்டாலும் தமிழருக்கு ஒருநாளும் தீங்கிழைக்கமாட்டோம் என்ற உறுதியுடன்தான் இருக்கப்போகிறார்களா? என்று நோக்கின், தெளிவாக எதுவும் தெரியவில்லை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

*   *

ஜனநாயகம், அரசியல் சூதாடிகளின் துருப்புச் சீட்டு அல்ல—மனித சமுதாய வளர்ச்சிக்காக வகுக்கப்பட்டுள்ள வழி. அரசியல், சமூக—பொருளாதாரம் போன்ற பல்வேறுபட்ட துறைகளில் பெரும்பான்மையினர் கீழ்ப்படியில் தாழ்வுற்றுக்கிடக்கும்பொழுது, ஒரு சிலர் மட்டும் மேட்டுக் குடியினர்களாக உல்லாச வாழ்வில் திளைத்துக் கிடந்ததைக் கண்ட அறிஞர்களின் உள்ளத்தில் ஒரு குமுறல் ஏற்பட்டது. இந்தக் குமுறல்தான் பிற்காலத்தில் ஜனநாயக வளர்ச்சிக்கு வித்தாகியது. எல்லோரும் சரிநிகர் சமமாக இன்பவாழ்வு நடாத்த, ஏற்ற வழிகளை, எதற்கும் அஞ்சாது எடுத்துகூற ஆரம்பித்தார்கள். அவற்றை நாட்டிலே நிலவச்செய்வதற்காக ஆயிரக்கணக்கான உத்தமர்கள், சிந்திய இரத்தச் சேற்றிலேதான் ஜனநாயக மலர் அரும்புவிட ஆரம்பித்தது. இதற்குப் பிறகுதான் நாட்டாட்சி முறை ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று நல்லறிவாளர்கள் கூற முற்பட்டனர். உலகில் பலபாகங்களில் ஜனநாயகம் வளர்ச்சி பெற்றது.

ஆயினும், எதேச்சாதிகார வெறியும், ஆளப் பிறந்தது ஆரிய வர்க்கம்தான் என்ற ஆணவமும் கொண்ட ஹிட்லரும், அவனது அரசியல் சகோதரனான முசோலினியுங்கூட, தங்களது ஆட்சியை ஜனநாயக ஆட்சிதான் என்று வெட்கமில்லாமல் கூறிக்கொண்டிருந்தனர். பல ஆண்டுகளாக உண்மை உலகிற்குச் சரிவரத் தெரியாது

லேயே இருந்து வந்தது. அவர்களுடைய பிரச்சாரம் அவ்வளவு பலமாக இருந்ததுதான் அதற்குக் காரணம். ஒரு பொய்யைத் திரும்பத் திரும்ப சொல்லிவந்தால், அதை நிஜமாக்கிவிட முடியும் என்ற கொள்கையை ஹிட்லரும், அவனது பிரச்சார கர்த்தாவான கொய்ப்பல்சும் கையாண்டு வந்தனர். முடிவு என்ன என்பதைத்தான் விளக்கவேண்டியதில்லை. இன்றையத் தமிழகத்தில் துரோகத்தின் நினைவுச் சின்னமாக விபீஷணன் உள்ளதைப் போல, உலக அரசியல் வட்டாரத்தில் கொய்பல்ஸ் பொய்யின் பிரதி உருவாக விளங்குகிறான்.

இன்றைய திராவிடத்தில் ஒரு கூட்டமும், பல பத்திரிகைகளும் கொய்பல்ஸின் பிரச்சார முறையைப் பின்பற்ற ஆரம்பித்திருக்கின்றன. இவைகள் ஜனநாயகத்திற்கு விளக்கம் கூற வந்திருக்கும் முறை மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. பட்டிக்காட்டு கிழவி, ஆங்கில நாகரீகத்தின் சிறப்பைப் பற்றியும்; பட்டினத்தில் பிறந்து கல்லூரியில் பயின்று, அழகு செய்து கொள்வதற்காகத் தலையை 'பாப்' செய்து கொண்டு, ஸ்நோவும், லிப்ஸ்டிக்கும் உபயோகிக்கும் புதுயுக நாகரீகத்தின் பிரதிநிதி என்று தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளும் யுவதி கிராம நாகரீகத்தைப்பற்றியும் மேடைப் பிரசங்கம் செய்ய வந்தால் எப்படியிருக்குமோ (!) அப்படித்தான் இருக்கிறது இந்தத் தெகிடுதெத்தக்காரர்களின் ஜனநாயக விளக்கம். இவர்கள், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஜனநாயகத்திற்கு முரணானது என்று கூறுகிறார்கள்!

நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் எல்லாவற்றிலும், ஜனநாயகத்திற்கு முரணாக இந்த எத்தர்களின் கண்ணுக்குத் தெரிவது, இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறைதான்! இதை ஒழிப்பதின் மூலம் உண்மை ஜனநாயகத்தை நிலை நிறுத்த இந்த நாட்டுப் பார்ப்பனர்களும், அவர்களின் பத்திரிகைகளும் முயற்சிக்கின்றன!

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஜனநாயகத்திற்கு முரணானதென்றும், இந்த சட்டத்தை உடனே நீக்கிவிட வேண்டும் என்றும், இவர்கள் கட்டுப்பாடாகப் போடும் கூச்சலையும், இவர்களை ஆதரிக்கும் பத்திரிகைகள் இவர்களுக்கு விளம்பரம் கொடுத்து, தலையங்கங்கள் தீட்டி பிரமாதப்படுத்தி வருவதையும், மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கு, இதில் ஏதோ உண்மை இருப்பதாகத்தான் தோன்றும். ஆனால் விபசார ஒழிப்பு மசோதா ஜனநாயகத்திற்கு முரணானதென்று விபசாரிகளும்; ஜமீன் ஒழிப்பு மசோதாவையும், இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதாவையும் அதன் சம்பந்தப்பட்டவர்கள் ஜனநாயகத்திற்கு முரணானது என்றும் கூறினால், எவ்வளவு பொருத்தமிருக்குமோ அவ்வளவு பொருத்தம்தான், பார்ப்பனர்களும் அவர்களுடைய பத்திரிகைகளும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை ஜனநாயகத்திற்கு முரணானது என்று கூறுவதிலும் இருக்க முடியும். தியாகிகளுக்கு நிலம் தருவது என்ற கொள்கையைச் சர்க்கார் வெளியிட்டவுடன், தன்னுடைய தியாகத்தை அய்ந்துகாணி நிலத்திற்கு விலைகூறி, நிலத்திற்கு இரண்டு முறை மனுப் போட்டிருக்கும் ருக்மணி லட்சுமிபதி போன்ற அம்மையார்கள், சட்டசபையில் ஜனநாயகம் பேசுவதென்றால் அதனுடைய யோக்கியதை எப்படியிருக்கும் என்று கூறவாவேண்டும்?

இன்று நாட்டில் உணவுப் பங்கீடு முறை அமுலில் இருந்து வருகிறது. காரணம் தேவைக்கேற்ற அளவு உணவுப்பொருள் கிடைக்காததுதான். ஆனால் சில சோற்றுப்பிண்டங்கள், தங்களின் பங்கீட்டு அளவுக்கு மேல் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்பதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது அரசாங்கம் தரமுடியாதென்று மறுக்கத்தான் வேண்டியிருக்கும். அப்பொழுது அவர்கள் தங்களின் தேவைக்கேற்ற அளவு உணவு தரமறுப்பது, ஜனநாயகத்திற்கு முரணானது என்று கூறுவார்களானால் இவர்களை ஜனநாயக வாதிகள் என்று கூறுவதா? அல்லது பிறர் எப்படிச் சீரழிந்தாலும் சரி, தாங்கள் மட்டும் உண்டு கொழுக்கவேண்டும் என்று கருதும் உலுத்தர்கள் என்று கூறுவதா? உள்ளதை எல்லோரும் பங்கிட்டு உண்டு வாழ்வதுதான் ஜனநாயகமே தவிர, சிலர் மட்டும் உண்டு கொழுப்பதும், ஏனையோர் மாண்டு மடிவதும் எப்படி ஜனநாயகமாக முடியும்? இதைப் போன்றதுதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையும். அரசாங்க அலுவலகங்களிலேயும், கல்விக்கூடங்களிலேயும் உள்ள இடம், படித்துவிட்டு வேலையற்றிருப்போருக்கும், படிக்க முற்படுபவர்களுக்கும் போதியதாக இல்லை. ஆனால், இந்த இரு இடங்களிலேயும் பார்ப்பனர்களே ஆதிக்கம் வகித்து ஏகபோகமாக அநுபவித்து வந்ததைத் தடுத்து, எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் கொடுத்து, தாழ்வுற்று, சமுதாயத்தின் கீழ்ப்படியில் நசுக்குண்டு கிடப்பவர்களை முன்னுக்குக் கொண்டுவரும் உயரிய நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டதுதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமுறை. இதுதான் உண்மையான ஜனநாயகமும் கூட. ஜனநாயக வளர்ச்சிக்கு மூலகாரணமாகிய மாஜினி, ரூஸோ போன்றவர்களின் புத்தகங்களையெல்லாம் கரைத்துக் குடித்திருக்கிறோம் என்று பிதற்றிக்கொள்ளும் புத்தகப் பூச்சிகளான ஜனநாயக வாதிகளுக்கு இந்த உண்மை புரியாததுதான். நாட்டு நிலையறிந்த நல்லறிவாளர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஜனநாயகத்திற்கு முரணானது என்று ஒருநாளும் கூற மாட்டார்கள்.

உயரிய ஜனநாயகக் கோட்பாட்டின் பெயரை, உஞ்சிவிருத்திக்கூட்டம் தங்களின் சுயநலத்திற்குப் பயன் படுத்திக் கொள்ள முற்பட்டிருக்கிறது. ஆகவேதான் இவர்கள் வெள்ளிக்கோப்பையில் விஷமிட்டு தருகிறார்கள் என்று கூறுகிறேன். ஜனநாயகத்தின் பெயரைக் கேட்டதும் மயங்கிவிடாது, இந்த நயவஞ்சகக்காரர்களின் சூழ்ச்சியை அறிந்து, அதை ஏற்க மறுத்துவிட்ட ஓமந்தூராரை ஒழித்து விட்டார்கள். ஓமந்தூரார் உள்ள நாட்களில்தான், இந்த உலுத்தர்களின் கூக்குரல் உச்சநிலையடைந்தது. உண்மையில் ஓமந்தூரார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையைச் சரியாக-கண்டிப்பான முறையில் நடைமுறைக்கு கொண்டுவரவில்லை என்ற வருத்தம் நமக்கு உண்டுதான். பிரஸ்தாப முறையை அமுல் நடத்துவதில் கொஞ்சம் தீவிரம் காட்டியிருப்பாரானால் நம்முடையவும்—நாட்டு மக்களுடையவும் போற்றுதலையும் பெற்றிருப்பார். ஆயினும், இந்த எத்து வேலைக்காரர்களின் சூழ்ச்சியைக்கண்டு ஏமாற்றமோ, அல்லது பயமோ அடைந்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை எடுத்துவிடாமல் இருந்ததற்காக மட்டும் ஓமந்தூராரைப் பாராட்டுகிறோம்.

ஓமந்தூராருக்குப்பின் நாட்டாட்சியை ஏற்றுக் கொண்டிருக்கும் புதிய பிரதமர் குமாரசாமிராஜாவும், ஓமந்தூராரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே ஆட்சி நடத்தப்போவதாகக் கூறியிருக்கிறார். அவரது இந்தப் போக்குக்கு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இவரும் ஓமந்தூராரைப் போல்மாற்றுக்கட்சிக்கு மதிப்பளித்து, நேர்மையைக்கடைப்பிடித்துநல்லாட்சி நடத்துவார் என்று எதிர்பார்க்கிறோம். இதனால்தானோ என்னவோ இவருடைய மந்திரிசபையையும் விரைவில் ஆட்டம் கொடுத்துவிடும் என்று அரசியல் வட்டாரத்தில் பேச்சு அடிபடுகிறது. எப்படியாவது இனத்துரோகிகளையும், பதவிப்பித்தர்களையும் ஆட்சிப் பீடமேற்றி, தங்களின் சுயநலத்திற்குஅவர்களைப்பயன் படுத்திக் கொள்ள ஆரியம் தீவிரமாக முயற்சிசெய்து வருகிறது. இந்த வஞ்சகர்களின் தாக்குதலுக்கு குமாரசாமி ராஜா ஆளானாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லைதான். இவர் தம்முடையபதவியைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஆரியத்தின் அடிதாங்கியாகி

அவர்களுக்குச்சலுகை காட்டமாட்டார் என்றுதான் எதிர்பார்க்கிறோம். இவர் தம்முடைய ஆட்சிக் காலத்தில் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தைச் சரியாக அமுலில் கொண்டு நடத்தி மக்களின் மதிப்பைப் பெற்று, உண்மை ஜனநாயகத்தை நிலைநிறுத்துவார் என்று எதிர்பார்க்கிறோம். போலி ஜனநாயகம் பேசி, மக்களின் பெரும் பகுதியினர்களை வஞ்சித்து, தாங்கள் மட்டும் உயர்வாழ்வு வாழஎண்ணுகின்ற மனிதசமுதாயக்கரையான்கள்விஷயத்தில் புதிய பிரதமர் எச்சரிக்கையாக இருப்பாராக! ஜனநாயகம் பேசும் இந்த வஞ்சகக் கூட்டத்திற்கு மக்கள் சரியான பாடம் கற்பிப்பார்களாக! உண்மைக்குப் பரிந்துபேசும் உயரிய பண்பை மக்கள் பெற்றுவரும் இந்த நாளில், இந்தப் பழிகாரர்களின் சதிச் செயல்கள் வெற்றி பெறாது என்று எச்சரிக்கிறேன்.

"புத்ததாசன்"

(2ம் பக்கத் தொடர்ச்சி)

லாமற் போய் விட்டது. மற்றும் மதத்தினால் ஏற்பட்டு வரும் கெடுதிகள் என்ன வென்று பார்ப்போமானால், முதலாவது, மதம், மனிதனின் அறிவையே அடியோடு கெடுத்து விடுகிறது. எப்படியெனில் ஒவ்வொரு மதக்காரனும் தனது மதப்படி கடவுள் உண்டு என்று நினைப்பதோடு, தனது மதத்தைக் கடவுள் உண்டாக்கினார் என்று நம்புவதாகக் காணப்பட்டாலும், மற்றொரு மதக்காரனும் அப்படித் தானே சொல்லுகிறான், ஆதலால் அவர்களுக்கு வேறு மதத்தையும், நமக்கு வேறு மதத்தையுமா கடவுள் செய்திருப்பார்? என்று சிறிதாவது யோசிக்கவோ, அல்லது நம் மதத்தை வையும்படியோ, அன்றி ஏற்காதபடியோ அவர் மற்றொரு மதத்தை உண்டாக்கி இருப்பாரா? அப்படியானால் இது ஒன்றுக்கொன்று முரண்பாடல்லவா? என்று எவருமேநினைப்பதில்லை. எவருமே என்றால் மத ஆச்சாரியார்கள், மத அபிமானிகள் என்பவர்கள் முதலாக எவருமே கருதுவதில்லை.

இந்த ஒரு காரணத்தாலேயே மதம் மக்களின் அறிவை எவ்வளவு தூரம் கெடுத்திருக்கின்றது என்பது விளங்கும். இரண்டாவது, மனிதர்களின் ஒற்றுமைக்குப் பதிலாக மனிதனை மனிதன் பிரித்துக் காட்டவே மதம் உதவுகிறது. மூன்றாவது, மதமானது மனிதனை வேடத்திலேயே திருப்தியடையச் செய்கின்றதேயொழிய, ஒழுக்கத்தில் சிறிதும் கவலை செலுத்த நிர்ப்பந்திப்பதில்லை. நான்காவது, எந்த மதத்திலும் பகுத்தறிவுக்குச் சிறிதும் இடமில்லை. ஏனென்றால் எவ்வளவு நல்ல மதமானாலும், முதலில் ஏதாவதொன்றை--அதாவது நமது அறிவிற்கும், பஞ்சேந்திரியத்திற்கும் எட்டாததைக் குருட்டுத்தனமாய் நம்பித்தானாக வேண்டுமென்று சொல்லாமலிருப்பதில்லை. அப்படியானால் அம்முறையில் ஒன்றை நம்பி விட்டு, அதே போன்ற மற்றொன்றை நம்பாமலிருப்பதற்குக் காரணமுமில்லை. அய்ந்தாவது, மதமானது கடவுளுக்கும் நமக்கும் இடையில் தரகர்களை உண்டாக்கி, அத்தரகர்களின் நடவடிக்கையையும், வார்த்தையையும், அது எவ்வளவு அசம்பாவிதம் ஆனாலும் சொந்த அறிவைவிட, பிரத்தியட்ச அனுபவத்தைவிட மேலானதாக நினைக்கச் செய்கின்றது. அன்றியும் மதமானது பணச் செலவு செய்யும் அளவுக்கு மோட்சமும், பாவமன்னிப்பும் இருப்பதாகவும், எவ்வித அக்கிரமங்களுக்கும், வணக்கத்தின் மூலம் மன்னிப்பு இருப்பதாகவும், நம்பச்செய்வதால் மனிதனை அக்கிரமம் செய்யவும், அவ்வாறு செய்வதன் மூலம் பணம் சம்பாதிக்கவும் தூண்டுகிறது. சோம்பேறிப்பிழைப்புக்குத் தாராளமாய் மதம் இடம் கொடுக்கின்றது.

மதம் மக்களைக் கோழைகளாக்குகின்றது. மதத்தினால் இவ்வளவு அநீதிகள் ஏற்பட்டும், உலக சம்பவங்களின் உண்மைக்காரண காரியங்கள் உணர்வதற்கில்லாமல், நிர்ப்பந்தமாய் மக்கள் மதத்தினால் தடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவும் தவிர, ஒருவனுடைய உழைப்பில் மற்றும் ஒருவனை வாழும்படி செய்கின்றது. நிற்க, உண்மைச் சைவன் என்பவன் ஒருவன் எவ்வளவு அயோக்கியனானாலும், ஒரு துளி சாம்பல் அவன் மேலே பட்டுவிட்டால், உடனே அவனுடையசகலபாவமும் தீர்ந்து நேரே "கைலையங்கிரிக்கு"ப்போய் விடலாம்என்கின்றான். சுருக்கமாகச் சொன்னால் வக்கீல் தொழில் செய்பவனும், பொய்ப் புராணப்பிரசங்கம் செய்பவனும் விபூதி பூசிக் கொள்ளுகிற காரணத்தாலேயே தன்னை ஒரு சைவன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். பிறரும் அப்படியே எண்ண வேண்டுமென்று ஆசைப்படுகிறான் என்றால், சைவனின் யோக்கியதைக்கும், சைவ சமயத்தின் பெருமைக்கும் வேறு சாட்சியம் தேவையா? அதுபோலவே ஒரு உண்மை வைணவன் என்பவனும் ஒரு தடவை ராமா என்று சொல்லி விட்டால் சகல பாவமும் தீர்ந்து விட்டது என்கிறான். ராமனை விட உலகில் வேறு தெய்வமில்லை என்கின்றான். அதுபோலவே ஒரு உண்மைக் கிருஸ்துவன் என்கிறவனும் ஏசுவை அடைந்தால் சகல பாவமும் தீர்ந்துவிடும் என்கின்றான். அன்றியும் ஏசுவின் மூலம் அல்லாமல் பாவ மன்னிப்பு என்பது கிடையவே கிடையாதென்கின்றான். அதுபோலவே ஒரு முஸ்லீமும் குர்ஆனில் சொல்லப்பட்டதெல்லாம் கடவுள் வாக்கு, அது எந்தத்தேசத்திற்கும்,எந்தக்காலத்திற்கும் பொருந்தியது; அதில் உள்ள ஒரு கோடாவது மாறினால் இஸ்லாம் மதமே போய்விடும் என்கின்றான். இப்படியே ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு பெருமையைக் கூறி அதுவேதான் உண்மையான மதம்; முறையே கடவுள் அவதாரம், கடவுள் குமாரன், கடவுள் தூதன் ஆகியவர்களால் ஏற்பட்டது என்றும் சொல்லுகின்றார்கள்.

(தொடரும்)

கவிஞர் பாரதிதாசன்.

பாரதிதாசன் கவிதைகள்	3	8	0
பாண்டியன் பரிசு	3	8	0
எதிர்பாராத முத்தம்	1	4	0
அழகின் சிரிப்பு	1	0	0
தமிழ் இயக்கம்	1	0	0
காதல் நினைவுகள்	0	12	0
இசையமுது	0	12	0
முல்லைக்காடு	0	12	0
நல்லதீர்ப்பு	0	10	0
கவிஞர் பேசுகிறார்	0	10	0
குடும்பவிளக்கு I	0	10	0
,, II	0	6	0
அமைதி	0	8	0

கிடைக்குமிடம்:-
குடி அரசு, ஈரோடு.

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி, தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.